www.tamilarangam.net

# இலக்கு

அரசியல் தத்துவார்த்த விமர்சன ஏடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''உண்மையான மனிதன்
வசதியான பாதையை நாடமாட்டான்
கடமையுள்ள பாதையையே
தேடுவான்
அவன் தான், செயல்திறன் உள்ள மனிதன்
அவனது
இன்றைய இலட்சியங்கள் தான்
நாளைய சட்டங்கள்''

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி மூன்று ஜூலைக் கலவரத்தின் போது வெலிக் கடைச் சிறைச் சாலையில் பாசிச அரசினால் படு கொலை செய்யப்பட்ட தங்கத்துரை, டாக்டர் இராசசுந்தரம், குட்டிமணி, றேபேட் இராஜேந்திரன் உட்பட ஐம்பத்தி நான்கு விடுதலைப் போராளிகளுக்கும், களத்தில் இறந்த விடுதலைப் போராளி செல்லக்கிளி அவர்கட்கும், இனக்கலவரத்தில் மரணித்த எம் சகோதரர்களுக்கும், எமது அஞ்சலியை சிரந்தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முளைத்து எழுந்து தளிர்த்து வளர்ந்து
செழித்து வளைந்து சரிந்து விழுந்து
இறந்து கிடந்த நெல்லின் தலையில்
இருந்தன நாளைய பரம்பரை நூறு
(நன்றி ''நதிக்கரை மூங்கில்—சிவசேகரம்'')

www.tamilarangam.net


# இலக்கு

அரசியற் தத்துவார்த்த விமர்சன ஏடு

ஏடு - 1 — பங்குனி-சித்திரை 1984 — சுவடு 1


## உங்களுடன் நானும்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராளி களுடன் தன்னையொரு புதிய தோழனாக சேர்த்துக் கொள்வதில் இலக்கு பெருமிதம் கொள்கிறது. தமிழ் மக்கள் மீதான சிங்களப் பேரினவாதம், U. N. P. அரசின் கொடூர ஒடுக்கு முறையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகவும் இந்த நவபாசிச அரசியல் அடக்கு முறைகளில் இருந்து தனியாக விடு பட்டு தமது சொந்த ஜனநாயக அரசை அமைத்துக் கொள்வதற்காகவும் தமிழ் தேசிய இனம் நடாத்தி வரும் புரட்சிகரப் போராட்டத் தில் தனது பங்களிப்பைச் செய்கின்ற நோக்கில் அவர்களுடன் தன்னையும் இலக்கு சேர்த்துக் கொள்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சகல பரிமாணங்களிலு மான நடவடிக்கைகளிலும் அது தனது முழு சக்தியையும் பிரயோகித்து ஈடுபடும் என்பதை உறுதியளிக்கிறது.

1984ம் ஆண்டின் பிறப்புடன் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பல விதத்திலும் சமரச, திரிபுவாத, அல்லது அதி தீவிரப் போக்குகளுடன் அலக்களிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு இக்கட்டான நிலையைத் துடைத்தெறிந்து விடுதலைப் போராட்டத்தில் எந்தவிதத் திசைவழுகல்களும் இன்றி தமிழ் மக்களின் இறுதி இலக்கை அடையும் ஒரே நோக்குடன் இலக்கு அயராது உழைக்கும் என்று உறுதி கூறுகின்றது.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதமேந்திய மக்கள் போராட்ட மாக முன்னெடுப்பதற்கு சரியான அமைப் பொன்றைக் கட்டியமைப்பது முதன்மையான பணியாகும். ஒழுங்கான சரியான கருத்துப் போக்குடன் அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டப்பட்ட மக்களாலேயே தமது தேசிய விடுதலையை வெற்றிகரமாக வென்றெடுக்க முடியும். இந்தப் பணியைச் செய்வதற்கு தமிழீழ மக்களை சரியான தத்துவார்த்த ரீதியில் வளர்த்து அமைப்பாக்கி விடுதலைப் போராட்டம் ஒன்றிற்கு தயார் செய்கின்ற பிரதான பணியில் தேசிய விடுதலைப் போராளி களுடன் தோளோடு தோள் நின்று இலக்கு தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

மக்கள் போராட்டமொன்றிற்கு மக்களைத் தயார்ப் படுத்துகின்ற சிரமம்மிக்க பணியில் இலக்கு எந்தவிதமான கருத்துப் போக்கு களுக்கு எதிராகவும், திசைவிலகல்களுக்கு எதிராகவும், சமரசப் பின்னடைவுகளுக்கு எதிராகவும் உக்கிரமான போராட்டத்தைத் தொடங்க தயங்க மாட்டாது.

இலக்கு அரசியல் தத்துவார்த்த ஏட்டைப் புரட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு புரட்சி கர இயக்கங்களுக்கும் தனது தோழமையான வணக்கத்தைக் கூறிக்கொண்டு விடுதலைப் போராட்டக் காலத்தில் தானும் ஒரு புதிய தோழனாகக் குதிக்கிறது இலக்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழர்களே!

இலக்கு எமது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் தனது பயணத்தை ஆரம்பித்து சிறீலங்கா நவபாசிச அரச படைகளின் தீவிர ஒடுக்கு முறைகளுக் கூடாக மிகவும் சிரமப்பட்டே உங்கள் கை களுக்கு வருகிறது. இதைப் பரவலாக்குவதும் தொடர்ந்து இலக்கு தனது பயணத்தைச் செவ்வனே செய்ய, தேசிய விடுதலைப் போராட்டத்தில் அது ஒரு பெறுமதியான பங்களிப்பைச் செய்ய, அதை ஆக்க பூர்வமாக விமர்சிப்பதும் ஆதரவளிப்பதும் தமிழீழ விடுதலையில் தீராத பற்றும், காத்திரமான அக்கறையும் கொண்டுள்ள உங்கள் ஒவ்வொருவரினதும் அவசியமான பணியாகும். இலக்கின் வளர்ச்சி எமது போராட்டத்தின் வளர்ச்சி. என்வே உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங் களை தயங்காது முன் வைக்க வேண்டுகிறோம். விருப்பு வெறுப்பற்ற விமர்சனம் மூலமாகவே ஆரோக்கியமான எமது பணியைச் செயலாக்க முடியும். எனவே எத்தகைய விமர்சனத் தையும் தயங்காது முன்வையுங்கள். சிறீலங்கா அரசை அம்பலப்படுத்தவும் அதன் சகல வேடங்களையும், துகிலுரிந்து காட்டவும் பிற் போக்கு சமரசப்போலி விடுதலை வேஷ தாரிகளை இனங்கண்டு கொள்ளவும், இவற்றின் மூலம் மக்களை, சரியான போராட்டத்தில் ஈடுபடுத்தவும் உங்கள் ஒவ்வொருவரினதும் ஆதரவை இலக்கு வேண்டி நிற்கிறது.

விடுதலைஇலக்கை வெற்றிகரமாக அடைய புரட்சிகரமான மக்கள் போராட் டத்தை முன்னெடுக்க இன்றே இப்பொழுதே இக்கணமே நாம் ஒவ்வொருவரும் தயாரா வோம்.

வீர சுதந்திரம் வேண்டிநின்றார், பின்னர்
வேறொன்று கொள்வாரோ?-என்றும்
ஆரமுதுண்ணுதற்கு ஆசைப்பட்டார்
கள்ளில்அறிவைச் செலுத்துவரோ.

## புதிய நாற்று

தேயிலை செடிகள் மீது
தென்றல் இல்லை;
புயல்.

இலைகளும், பூக்களும்
இறந்து விழுந்தன.
இன்னும் என்ன?
செடிகள் மாத்திரம்
விறைத்து நிற்கும்.

பன்றிகள் வந்து
வேர்கள் பறிக்கும்.
குன்றுகள் நோக்கி
புறுக்கள் பறக்கும்.

காகங்கள் சிலது
சிறகுகள் விரித்து
சற்றே கரையும்.
காலங் காலமாய்
தங்கள் மீது
எச்சங்கள் விட்டதை
தேயிலை செடிகள்
திரும்பிப்பார்க்கும்.

பாடல் ஒன்று
மனதில் புரளும்.
"தொண்டமான் கோழி கூவி."
இனி
யாரின் வரவு
எங்களை துளிர்விக்கும்?
எம்.
பூக்களை ஆக்கும்?
கேள்விக்கு பதிலாய்
நாங்கள்! நாங்கள்!.
என்றே பதில் வரும்.
தேயிலைச் செடிகள்
திரும்பிப் பார்க்கும்.
யாருமல்ல:
குனிந்து பார்க்கும்
ஆங்கே
புதிய நாற்றுகள்
புடைத்துக் கிளம்பும்!

**வண்ணச் சிறகு**

(நன்றி; மக்கள் மறுவாழ்வு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மட்டுநகர் சிறையுடைப்பும் இயக்கங்களின் சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளும்

1983 ம் ஆண்டு வெலிகடை சிறைப்படுகொலை களிற்குப்பின் எஞ்சிய தமிழீழப் போராளிகள் மட்டுநகர் சிறைச்சாலையில் ஒன்று சேர்க்கப் பட்டனர். இவர்கள் அனைவரும் அங்குள்ள சிறையதிகாரிகளின் ஆதரவுடன் சிறையை உடைத்து தப்பி இன்று பாதுகாப்பாக உள்ளனர். இச்சம்பவமானது இதுவரை நடந்த தமிழீழப் போராட்ட நடவடிக்கை களில் ஓர் சிகரமாக அமைந்துள்ளது. சிங்கள தரகு முதலியலாளிய அரசிற்கு ஒருசவாலாகவும் அமைந்தது. இச்சிறை உடைப்பானது வெளி நாடுகளில் தமிழீழ மக்களின் ஆதரவை பறைசாற்றக் கூடியதாகவும் இருந்தது. ஆனால் இந்தப் பெருமைகளையெல்லாம் சீர்குலைக்கும் வகையில் இச்சம்பவத்தில் கலந்து கொண்ட வர்கள் அங்கம் வகிக்கும் இயக்கங்கள், மிகக் கேவலமான முறையில் உரிமை கொண்டாட முற்பட்டு, ஓர் இயக்கத்தை சேர்ந்த தோழர் களை இன்னொரு இயக்கத்தை சேர்ந்தவர்கள் கடத்திக் கட்டிப் போட்டுத் தாக்குமளவிற்கு வளர்ந்துள்ளது. இதில் எந்த இயக்கம் கூடுதல் பங்களிப்பை செலுத்தியது என்ற விடயத்தை நாம் ஆராய முற்படவில்லை. பல இயக்கங்களும் தனிநபர்களும், பொதுமக்கள், சிறையதி காரிகள் ஆகியோர் தங்களாலான பங்களிப்பை செலுத்தியே உள்ளார்கள்.

ஓர் பக்கம் இயக்கங்களிடையே ஒன்றிணைப் பதற்கான ஐக்கிய முன்னணி பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டே ஓர் இயக்கத்தை ஓர் இயக்கம் தாக்கி பிரசுரங்கள் விட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் தமிழீழத்தில் மட்டுமல்ல இந்தியா, லண்டன் போன்றஇடங்களிலும் இவர்களது சிறுபிள்ளைத் தனமான சண்டை நீடிக்கின்றது. ஆகவே இவர்களது இச் செயல்கள் தமிழீழ மக்கள் விடுதலையை விட பாராளுமன்ற, அரசியல் வாதிகள் போல் தங்களை விளம்பரப்படுத்து வதிலேயே குறியாக உள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. இயக்கங்கள் ஒன்றிணைந்து போராட வேண்டிய இத்தருணத்தில் ஒருவரை யொருவர் தாக்கி அறிக்கை விடுதலையும் நேச முரண்பாடுகள் பேசித்தீர்க்கப்படாமல் அடிபட்டுக் கொள்ளுமளவிற்கு வளர்வதையும் இலக்கு கண்டிப்பதுடன் மிகுந்த மன வேதனையையும் தெரிவித்துக் கொள்கின்றது; இனிமேலாவது இச்சம்பவங்கட்காக உரிமை கொண்டாடி சண்டை பிடித்து மக்களை விரக்திக்குள்ளாக்காமல் இயக்கங்கட்கிடையில் ஒற்றுமையை பேணிவளர்த்து கொள்ளும் அவசியத்தை இலக்கு வலியுறுத்துகின்றது.

எதிர்காலத்தில் எந்தப் பிரச்சனையையும் சில தனிநபர்களினதோ, குழுவினதோ நலனின் அடிப்படையில் பார்க்காது மக்கள் நலனின் அடிப்படையில் பார்த்து அணுகுமாறு இலக்கு வேண்டிக் கொள்கின்றது.

''நான் தோழர்களுடன் சிறையில் இருந்த போது எனது தோழர்களுடன் பேசுவதற்கு ஒரு முறை கூட என்னை அனுமதிக்கவில்லை. இருந்த போதிலும் நாங்கள் ஒரே மாதிரியாகத் தான் நடந்து கொண்டோம். இதில் உண்மைஎன்னவென்றால், மனிதர்கள் தங்களது இதயங்களில் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கொண்டுள்ளபோது, அவர்களைஎவற்றாலும் தனிமைப் படுத்தி விடமுடியாது. சிறைச்சாலைச் சுவர்களோ, கல்லறைகளோ அவர்களைப் பிரித்துவிட முடியாது. ஒரே நினைவு, ஒரே ஆத்மா, ஒரே கருத்து, ஒரே உணர்வு, ஒரே பெருமை அவர்கள் அனைவரையும் பிணைத்திருக்கும்''

(வரலாறு என்னை விடுதலை செய்யும்- பாடல் காஸ்ரோ)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்நாடு அமைப்புக் கமிட்டியின் வரட்டுச் சூத்திரவாதமும் ஈழத்தமிழரின் உண்மைநிலையும்

இந்திய பொதுவுடமைக் கட்சியின் (மா/லெ) தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி 'இலங்கை தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என்ன' என்ற பெயரில் சிறு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்திய பொதுவுடைமைக்கட்சி (மா/லெ) வரட்டுச் சூத்திரவாதம் காரணமாக, மறுபிறப்புக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினையும், மற்றும் சில இளைஞர் இயக்கங்களையும் கருத்தில் வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக 'தமிழீழ விடுதலை' இருக்க முடியாது என அழுத்தம் திருத்தமாக தெரிவித்துள்ளது. இத்தகைய கிளிப்பிள்ளை வாசகங்களை திரும்பத்திரும்ப பல்வேறு தடவைகளில் பல்வேறு வடிவங்களில் கேட்டுச் சலித்துப்போன ஈழத்தமிழ் மக்கள் இவற்றிற்குப் பதலளிக்க வேண்டியது அவசியமில்லைத் தான். இதற்கான சிறப்பான பதிலை எந்தவித விவாதங்களும் அறிக்கைகளும் செய்வதைவிட மேலாக நடைமுறை மிகவும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருக்கின்றது. இலங்கையில் இன்று இத்தகைய வாய்ப்பாட்டு அரசியல் வாதிகள் தமது பெயர் விலாசமற்றவர்களாக உதிரிகளாகி அழிந்து பட்டுவிட்டது யாவரும் அறிந்த உண்மை. ஆயினும் இப்போது இந்த மாநில அமைப்புக் கமிட்டியின் இந்தப் பிரசுரம் இந்திய மக்கள் மத்தியில் வெளியிடப் பட்டிருப்பதால் ஏற்படக்கூடிய குழப்பங்களை உத்தேசித்து இதற்கான ஒரு பதிலை எழுதுவது அவசியமாகின்றது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாநில அமைப்புக் கமிட்டி) இந்திய உழைக்கும் மக்களுக்கு இவர்களது வேஷம் வெளிக்க, வரலாறு நீண்ட காலத்தை எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்பது எமது இலங்கை அனுபவத்தில் நாம் கண்ட பாடமாகும். சரியான சமூக நிலைமைகளை ஆய்வு செய்வதில் மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளத் தவறி தமது இருக்கையில் இருந்த படியே அறிக்கை விடுகின்ற எந்தவொரு அமைப்போ, இயக்கமோ நீண்ட நாட்கட்கு மக்களுக்கு 'பாவ்லா' காட்டுவது சாத்தியமில்லை. ஆனல் இலங்கைப் பிரச்சனைப்பற்றி, இப்படி தேவையற்ற விதமாக இவர்களது மேலான அபிப்பிராயத்தை யாரோ எதிர் பார்த்தது போல இந்த பிரசுரமூலம் இவர்கள் திருவாய் மலர்ந்துள்ளதை எவ்வாருயினும் அனுமதிக்க முடியாது. இச் சிறு பிரசுரத்தின் முதலாவது பகுதி இலங்கை தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கு முறைபற்றிய ஒரு சுருக்கமான வரலாருகும். இந்த வரலாற்றில் பல விடயங்கள் தப்பிப் போயிருப்பினும், நாம் அவற்றை குறித்து அதிகம் அலட்டிக் கொள்ள தேவையில்லை. ஏனென்ருல், இவர்களை விடவும் ஈழத்தமிழ்மக்களின் பிரச்சனைகள் பற்றி இந்திய மக்கள் அதிகமாக அறிவார்கள். எனவே அதை விடுத்து 'பிரச்சனையின் சாராம்சமும் நமது அணுகுமுறையும்' என்ற பகுதிக்கு வருவோம். இவர்கள் தமது மற்றெந்தப் பிரசுரங்களுக்கும் குறையாத விதத்தில் இதிலும், மிக நீண்ட பீடிகையுடனேயே பிரச்சனைக்குள் நுளைகின்றனர். 12 முதல் 23ம் பக்கம் வரை நீளும் இவர்களது இந்தப் பீடிகைக்குப் பின் 23 முதல் 27ம் பக்கம் வரையிலான இறுதிப் பகுதியில் இலங்கைப் பிரச்சனை பற்றிய தமது கருத்தை முன் வைத்துள்ளனர். இந்த இறுதிப்பகுதியை மட்டும் நாம் எமது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது போதுமானதாகும்.

இவர்கள் இப்படித் தொடங்குகிருர்கள்:

'முதலாவதாக இலங்கை அரசு ஒரு ஏகாதிபத்திய அரசோ, காலனியோ நவகாலனிய அரசோ அல்ல் எனவே தமிழீழம் தனிநாட்டுக் கோரிக்கை சிங்கள பெருந்தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்க்கிறதே அன்றி, ஏகாதிபத்தியத்தை எதிர்பதாகவோ, அதைப் பலவீனப் படுத்துவதாகவோ இல்லை. எனவே அந்த அடிப்படையில் நாம் தமிழீழம் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்க முடியாது'.

முதல் வரியை மீண்டும் ஒரு முறை பார்ப்போம். இந்த ஆண்டின் மிகச்சிறந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகைச்சுவை இதைவிட வேறு இருக்க முடியுமா? இலங்கை அரசு ஒரு ஏகாதிபத்திய அரசோ, காலனிய நவகாலனிய அரசோ அல்லவாம்! ஆயினும் இது சிரிப்புக்குரிய விடயமில்லை. ஏனென்றால் இது இ. பொ. கட்சி (மானில அமைப்பு கமிட்டி)யின் அரசியல் முடிவு.

சரி அப்படித்தான் இலங்கை அரசு இந்த மூன்று வகைகளுக்குள்ளும் அடங்கவில்லையென வைத்துக் கொள்வோம். இத்தகைய ஒரு முடிவை எந்த அடிப்படையான காரணிகளை வைத்துக் கொண்டு இவர்கள் எடுத்திருக்கிறார்கள். எந்த தர்க்க ரீதியான காரணங்களை இவற்றிற்கு காரணமாக சொல்கிறார்கள்? அதை இந்த இடத்தில் சொல்லாது விட்டது ஏதனால்? அப்படி அதற்கான ஒரு காரணத்தை தெரிவிக்க இன்னொரு மேலதிக பிரசுரம் தேவையென்பதாலா? அல்லது, அதற்கான காரணங்கள் அவர்களுக்கே தெரியவில்லை என்பதாலா?

போகட்டும், அப்படியாயின் இலங்கை அரசு எத்தகைய ஒரு அரசு என்பதையாவது இவர்கள் சொல்லியிருக்க வேண்டாமா? இந்த மூன்று வகைகளுக்குள்ளும் அடங்காத, இந்த அரசுதான் இது என்று இவர்கள் இலங்கை அரசை தெளிவாக கூறியிருக்கலாமே. ஏன் கூறவில்லை. இந்த ஏகாதிபத்திய காலகட்டத்தில், ஓர் மூன்றாம் மண்டல நாடான இலங்கை எப்படிப்பட்ட ஒரு நாடாக இருக்க முடியும் என்பதை தீர்மானிப்பதில் இவர்கள் முதல் சொன்ன கருத்து காரணமாக இவர்கட்கே சிக்கல் ஏற்பட்டுவிட்டதா? இந்த மூன்றினுள்ளும் அடங்கவில்லையானால் இலங்கை அரசு ஒரு மக்கள் ஜனநாயக சோசலிச குடியரசு என்று 'ஜே. ஆர்' சொல்லிக் கொள்வதை அப்படியே அதன் முழு அர்த்தத்தில் ஏற்றுக் கொள்கிறார்களா? அல்லது 18ம் நூற்றாண்டு கால ஏகாதிபத்திய காலத்திற்கு முந்திய ஐரோப்பிய முதலாளித்துவ அரசுகள் போன்ற ஒன்றாக இலங்கையை இவர்கள் கருதுகிறார்களா? ஏன் இவர்களுக்கு இந்த குழப்பம். காரணம் மிகவும் தெளிவானது. மக்கள் மத்தியில் வேலை செய்வதன் மூலம் மக்களிடமிருந்துகற்றுக்கொள்ளவும், யதார்த்த நிலைமைகளில் இருந்து பிரச்சனைகளை ஆராயும் படியும் மார்க்சியம் போதிப்பதை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை. நிறை மார்க்சிய சால்களை உருப்போட்ட அறிவு ஜீவிகளாக, அந்த மிதப்பில் இருந்து கொண்டு தமது புத்தக மேற்கோள்களிற்கு ஏற்ப பிரச்சனைகளை ஆராய்கின்ற போக்கு இவர்களிடம் காணப்படுவதே இதற்கான உண்மைக் காரணம். இதை இவர்களது மேற்காட்டிய மேற்கோளின் அடுத்த வாசகம் நன்றாக மெய்ப்பிக்கின்றது.

'தமிழீழம் தனிநாட்டுக் கோரிக்கை சிங்கள பெருந்தேசிய ஒடுக்குமுறையை எதிர்க்கிறதேயன்றி ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகவோ, பலவீனப்படுத்துவதாகவோ இல்லை' என்கிறார்கள். சரிதான் இலங்கை என்ற வளர்ச்சியடைந்த இந்த 'முதலாளிய' நாட்டில் பெருந்தேசிய ஒடுக்குமுறை ஏற்பட்டிருப்பதால் அதை எதிர்ப்பதாக, இந்த போராட்டம் வெடித்திருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள். எனவே அதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை இல்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள்! ஆனால் ஏன் அங்கு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை இருக்க வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் அபிப்பிராயத்தில், இது எந்த விதத்திலும் சர்வதேசிய தன்மையற்ற சாதாரண உள்நாட்டு இனங்களிற்கிடையிலான சச்சரவு அதில் எவ்வாறு ஏகாதிபத்திய எதிர்ப்பு இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது? இந்த எதிர்பார்ப்பு மிகவும் வேடிக்கையானதாக இருக்கிறது. ஓர் குடும்பத்தில் தமது சொத்துக்களை பகிர்ந்து கொள்வதில் தம்முள் சண்டையிடுகின்ற இரு சகோதரர்கள், அயல் வீட்டுக் காரனுடன் சண்டையிடவில்லையே என்று அங்கலாய்க்கின்ற வெகுளித்தனமான எதிர்பார்ப்பல்லவா இது? இவர்கள் சொல்கின்ற விடயத்தில் இவர்களுக்கே தெளிவாக இல்லை என்பது தெளிவாகின்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பு ஓர் முற்போக்கான அம்சம் என்பதால் எல்லா சமயங்களிலும் எல்லா போராட்டங்களிலும் இவர்கள் அதை எதிர்பார்ப்பார்கள் போல இருக்கின்றது. தமது பிரச்சனைக்கு ஏகாதிபத்தியம் காரணமாக (இவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தின்படி) இல்லாத போதும் அதை எதிர் பார்பது அவசியமாம்! அல்லா விட்டால் இவர்கள் ஆதரிக்க மாட்டார்களாம்! மிகவும் வேடிக்கைதான்.

இவர்களது இந்தப் போக்கை கவனிக்கும் போது இயல்பாகவே இன்னொரு சந்தேகமும் எழுகிறது. ஏதோவொரு காரணத்தால், இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏற்கவில்லை. அதன் காரணமாக அதற்கு மாக்சிய முத்திரையுடன் கூடிய ஒரு காரணத்தை தெரிவிக்க விரும்பி சும்மா வேனும் ஒரு காரணத்தை இவர்கள் தெரிவித் திருக்கிறார்கள்! இதன் மூலம் தங்களை மாக்சிய வாதிகளாகவும் ஏகாதிபத்திய விரோதிகளா கவும் காட்டிக் கொண்டு யாருக்கோ நல்ல பிள்ளையாக இருக்கவும் விரும்புவதாகப் படுகின்றது.

உண்மையில் நிலமை என்ன? இலங்கை ஒரு நவகாலனிய அரசு. அமெரிக்க ஏகாதிபத் தியத்தின் நேரடிப் பொம்மை அரசாக இலங்கை அரசு இயங்கி வருகின்றது. உலக ஏகாதிபத்தியங்களிற்கு இலங்கைச் சந்தையை தாரைவார்த்துக் கொடுக்கும், ஒரு நல்ல தரகனாக ஜே. ஆரும், அவன் யூ. என். பி அரசும் இயங்கி வருகின்றன. இந்த ஜே. ஆரின் 77ம் ஆண்டு 'புதிய கொள்கைகள்' அசல் ஏகாதிபத்திய விசுவாசக் கொள்கை களாக இருந்ததும், அதை வெற்றிக்கு கொண்டுவர பலபல்தேசியக்கூட்டுக்கம்பனிகள் முன் நின்று உழைத்ததும், வரலாறு கூறும் பாடமாகும். அதன் பின்னர் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறை மூலம் ஏகாதிபத்திய விசுவாசியாக பூரணமாக இயங்கி மக்களை ஒடுக்க முடியாதெனக் கண்டு, பாராளு மன்றத்தை பாவித்தே அதன் செல்வாக்கை இல்லாமல் செய்து ஜனாதிபதி ஆட்சியை கொண்டுவந்து இங்கு பாசிச ஆட்சியொன்றை உருவாக்கியதும், இதைத் தொடர்ந்து தேசிய இன ஒடுக்குமுறை மேலும் உக்கிரமடைந்த தையும் அரசியல் அவதானிகள் மறந்திருக்க மாட்டார்கள்.

எனவே இலங்கையில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு நவகாலனிய தரகு முதலாளிய அரசு (இந்தியாவில் தரகு முதலாளியமல்ல பெருமுதலாளிகளே காணப் படுகிறார்கள் என்று இவர்கள் வேறொரு 'பிரசுரம்' வெளியிட்டுள்ளதால், இலங்கை யையும் அப்படிக் கருதக்கூடும். பிரச்சனைகளில் இருந்து நழுவியோட தரகு முதலாளியத்தை பெருமுதலாளியமாக மெருகேற்றிப் பார்ப்பது வசதியாக இருக்கும். ஆனால் போராட்டத் திற்கு, யதார்த்த நிலைக்கு இது உதவாது. பெருமுதலாளியம் என்பதெல்லாம் சாராம் சதில் தரகு முதலாளியமே. வெறுமனே புத்தக வார்த்தை கட்கு நிலமையை தேட முயற்சித் தால் இத்தகைய ஆபத்துத்தான் ஏற்பாடும். இதுகாலப் போக்கில்பெருமுதலாளியத்திலும் புரட்சிகர பகுதிகளை தேடும் முயற்சிக்குப் போய் புரட்சிக்கு குந்தகமாக அமையும்.) எனவே இத்தரகு முதளிலாய அரசுக்கு எதிரான இந்ததமிழீழ விடுதலைப் போராட் டம் அடிப்படையில் ஏகாதிபத்திய விரோத மானதே. அதன் காரணமாகவே ஏகாதிபத் தியங்களும் அதன் விசுவாசிகளும் விடுதலைப் போராட்டத்தை சிதறடிக்கவோ அல்லது திசை திருப்பவோ, அன்றி நசுக்கவோ, அதன் தன்மையைப் பொறுத்து முயற்சியிலீடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையிலோ, வேறெந்த முதலாளிய அமைப்பின் தலைமையிலோ, விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றால் அது ஏகாதிபத்திய விசுவாச முள்ளதாக மாறும் சாத்தியம் இருக்கும். இங்கு த. வி. கூவின் தலைமை தூக்கியெறியப்பட்டுள்ளதும், பரவலாக மக்கள் ஜனநாயக சக்திகளின் — ஏகாதிபத்திய விரோத சக்திகளின் செல்வாக்கு விடுதலைப்போராட்ட தலைமையில் பரவி வருவதும் ஏகாதிபத்தியங்களுக்கு புரிந்திருக் கிற அளவுகூட இவர்கட்கு புரியாமல் இருப்பது வியப்புத்தான். சரியான தலைமையில் விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கபட வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டிய 'மார்க்சியம்' உடைந்து மறுபிறப்புக் காக போராடிக் கொண்டிருக்கும் முதலாளிய தலைமைகளை கருத்தில் கொண்டு போராட்டத் தையே கோணலாக விமர்சிப்பது மிகவும் ஒரு கேடுகெட்ட முயற்சியாகும். இது இவர்களது மார்க்சிய அறிவு, வர்க்க நிலைப்பாடு எல்லா வற்றிலும் சந்தேகத்தை கிளப்பிவிட்டுள்ளது.

இலங்கையின் யதார்த்த நிலமையை புரிந்து கொள்ளாது வெறும் வார்த்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட்டில் இவர்கள் இறங்கியுள்ளார்கள் என்பதை மேலே கவனித்தால் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். மேலும் இவர்கள் கூறுகிறார்கள் 'இரண்டாவதாக தமிழீழம் தனிநாடு கோரிக்கை வைப்பவர்களில் ஒரு பிரிவினர் இப்போதிருக்கும் முதலாளித்துவ அரசியல் பொருளாதார அமைப்பைக் கொண்ட தமிழீழத்தையே தமது நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் முதலாளிய அரசியல் பொருளாதார அமைப்புக்கான திட்டத்தின் அடிப்படையில் இனவெறி அரசுக்கு எதிராக பெரும்பான்மையான மக்களை திரட்டமுடியாது. எனவே இனவாத அடிப்படையில் தமிழினமக்களை அணிதிரட்டுகின்றனர். இது தமிழ் சிங்கள மக்களின் நன்மைக்கு கேடுவிளைவிப்பதாகவும், உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தை இனவாத சேற்றுக்குள் திசை திருப்பி விடுவதாகவும் இருக்கிறது. மேலும் முதலாளிய அரசியல் பொருளாதார அமைப்பை கொண்டமையும் தமிழீழம் தனிநாடு இப்போதிக்கும் அரசியல் பொருளாதார அமைப்பைவிட எந்தவிதத்திலும் முற்போக்கானது அல்ல எனவே முதலாளித்துவ பொருளாதார அமைப்பை கொண்ட வர்க்கப்போராட்டதிற்கு ஆதரவான சிறந்த நிலைமைகளை ஏற்படுத்துவதாகவோ (ஏகாதிபத்தியத்தை எதிர்பதாகவோ பலவீனப்படுத்துவதாகவோ) இல்லாததால் அந்த அடிப்படையில் இப்பிரிவினர் வைக்கும் தமிழீழம் தனிநாடு கோரிக்கையை நாம் ஆதரிக்கமுடியாது''

ஆக முதலாவது காரணமோ, இந்தக் காரணமோ தமிழ்மக்களின் யதார்த்த நிலமைகட்குதமிழீழம் தேவையா இல்லையா என்ற பிரச்சனையிலிருந்து எழுந்தல்ல, தமிழ்மக்களின் பிரச்சனைக்கு தமிழீழம் தீர்வா இல்லையா என தீர்மானிக்க, இவர்கள், அவர்களின் நிலமையை ஆராயாமல் அதாவது பிரச்சினையை அடிப்படையில் நோக்காமல், தோற்றங்களை வைத்துக் கொண்டு, அடிப்படை மாக்சியத்துக்கு 'விரோதமாக நோக்குகிறார்களென்பது தெளிவாகிறது. தமிழீழத்தை ஒரு தீர்வாக இவர்கள் கருதாதற்கு அல்லது அதை ஆதரிக்காததற்கு காரணம், ஒரு பகுதியினர் முதலாளிய அமைப்பை நோக்கி போராடுவதால் என்கிறார்கள். இதைவிட கோமாளித்தனமான ஒரு கருத்தை ஒரு கிராமிய நாடகத்து விதூசகனால் தான் சொல்லமுடியும். பக்கத்து வீட்டுக்காரன் கெட்டவன் என்பதற்காக நான் திருமணம் செய்யாதிருப்பது போன்றது. இந்த விவாதம் முதலாளித்துவ சக்திகள் எந்தப் போராட்டதிலும் தமது வர்க்க நலன்களுக்கேற்பவே போராடும். அதற்காக போராட்டத்தையே விட்டுவிடுவதென்பது சாத்தியமா? பிச்சைக் காரனுக்குப் பயந்து அடுப்பு மூட்டாதிருக்க முடியுமா? முதலாளித்துவ பிரிவினர் இனவாதம் பேசுவது, அவர்கள் நாட்டைப் பிரித்து தமது அரசை நிலைநாட்ட என்று இவர்கள் கூறுகிறார்கள். நல்லது இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு எப்படி ஏற்பட்டது? சுயமாகவா? ஆகாயத்திலிருந்து குதித்ததா? உண்மையில் ஜே. ஆரின் தரகு முதலாளிய அரச இனவெறி ஒடுக்குமுறையானது தமிழ்தேசிய இனத்திற்கு மொத்தமாக சேர்த்து நடாத்தப்படுவதால் அதில் பாதிக்கப்படுகின்ற முதலாளியப் பிரிவு தனது வர்க்க நலன்களிற் கேற்ப அத்தகைய ஒரு போராட்டத்தை நடாத்துவதற்கு முயல்கின்றது. இது அந்த வர்க்கம் முதலாளிய வர்க்கம் என்பதற்காகவோ பிற்போக்கான ஒரு போராட்டமாக கருதுவது மார்க்சியத்தின் அடிப்படையையே நிராகரிப்பதாகும். ஆயினும் போராட்டதலைமையை தமிழ் உழைக்கும் மக்கள் வென்றெடுக்க வேண்டுமென்பது அவசியமானதாகும். அதற்காக ஒடுக்குமுறைக்குள்ளாகும் முதலாளிய வர்க்கதின் போராட்டத்தை நிராகரிக்க முடியாது. இது வர்க்கப் போராட்டமல்ல தேசிய விடுதலைக்கான போராட்டம் ஒரு இனம் தன் மீதான தேசிய ஒடுக்குமுறைகளை களைந்தெறிய நடாத்துகின்ற போராட்டம் இதில் தேசிய முதலாளிய பிரிவினரும் புரட்சிகர அம்சம் கொண்டவராகவே இருப்பர் இந்த அடிப்படையை இவர்கள் புரிந்து கொள்ளாமல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோர் தத்தமது காலகட்டங்களின் யதார்த்த நிலமைகட்கு ஏற்ப கூறியவற்றை வரட்டுச் சூத்திரங்களாக அவற்றின் இயங்கியல் தன்மையை மறந்து அப்படியே இப்போதும் பிரயோகிப்பது ஒன்றில் முட்டாள்தனமானதாக இருக்கும் அல்லது அயோக்கியத்தனமானதாக இருக்கும். இவர்கள் இப்படி கூறுவதன் மூலம் உண்மையில் என்ன செய்கிறார்களென்றால், இலங்கையின் சிங்கள பெருந்தேசிய இன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெறியர் கட்குசற்றும் குறைவில்லாதவிதத்தில் தமிழ்மக்களது உரிமைப் போராட்டத்தை இனவெறிப்போராட்டமாக பிரகடனப்படுத்தி பேரினவாத ஒடுக்குமுறைக்கும், அதன்காரண மாக ஏகாதிபத்தியத்திற்கும் துணைபோகிறார் கள் தத்துவரீதியிலான குழப்பமானது, நடை முறையற்ற தமது மன விருப்பிலான கருத்துக் களை தெரிவிப்பதில் தொடங்கி அது போராட்டதின் வளர்ச்சியில் எதிர்முகாமில் சென்று தள்ளிவிடுகின்றது. இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ, தம்மை ஏகாதி பத்திய விரோதிகளாக கூறிக்கொண்டே அவர் கட்கு துணைபோகும்படி இந்த குழப்பம் செய்துள்ளது.

இவர்கள் சிங்கள பெருந்தேசிய இனவெறி அரசுக்கு துணைபோகிறார்கள் என்பதற்கு இவர்களது மூன்றாவது காரணம் மிகவும் சிறந்த உதாரணமாகும். இவர்கள் சொல் கிறார்கள் 'மூன்றாவதாக தமிழீழம் தனிநாடு கோருபவர்களில் மற்றொரு பிரிவினர் சிங்கள உழைக்கும் மக்களின் ஒற்றுமையையும் தமது நோக்கமாக கொள்கின்றனர். சோசலிசத்தை நோக்கி முன்னேற ஆதிக்கத்தில் இருக்கும் அரசை வீழ்த்தவேண்டும். அந்த இடத்தில் முதலாளித்துவ அரசமைப்புக்குப் பதில் ஒரு ஜனநாயக அரசமைப்பை (இனவெறி பாசிச அடக்கு முறைக் கெதிராக இனஒடுக்கு முறையை எதிர்க்கும் அனைத்து ஜனநாயகச் சக்திகளின் சோவியத்வடிவிலான ஒரு அரசமைப்பை) ஏற்படுத்த வேண்டும். இன வெறி அரசு தமிழ் தேசிய இனத்திற்கு, ஒடுக்குமுறை அரசாக இருக்கும் அதே வேளையில் இருதேசிய இன உழைக்கும் மக்கள் மீதும் ஒடுக்குமுறையை செலுத்துவதாகவும் இருக்கிறது: எனவே இரண்டு தேசிய இனங்களின் உழைக்கும் மக்களுக்கும் பொது எதிரியாக இருக்கும் இனவெறி அரசை, சோசலிசமாக கொண்டிருக்கும் ஒரு திட்டதின் கீழ் தூக்கி எறிவது தமிழ் தேசிய இன மக்களுக்கு இன ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையையும் சமத்துவத்தையும் தரும். அனைத்து உழைக்கும் மக்களின் நல்வாழ்க் கைக்கும் உத்தரவாதம் தரும்...' இந்த நோக்கை சொல்கிற பிறபிரிவினடம் இவர்கள் பின்வரும் குற்றங்களை சுமத்துகின்றனர்.

1. சோஷலிச தமிழீழம் பற்றி பேசுகின்ற இப்பிரிவினர் இனவெறி அரசை வீழ்த்து வதற்கு சிங்கள தமிழ் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்காக திட்டம் எதையும் வைத்திருக்கவில்லை. மாறாக தமிழ் மக்களை மட்டும் ஒன்று திரட்டி சோசலிசத் தனிநாடு அமைக்கப் போவதாக கூறுகின்றனர்.

2. இதன் மூலம் சிங்கள தமிழ் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டவேண்டிய பணியை மறுக்கின்றனர்.

3. சிங்கள மக்களை இதன் காரணமாக சிங்கள இனவெறி அரசின்பின் விட்டுவைக்கின்றனர்.

4. இவர்களது பிரிவினைவாதம் சிங்கள தமிழ் உழைக்கும் மக்களை ஒரணியில் திரட்டுவதற்கு பதில் பிரிப்பதாயும் அரசை பலப்படுத்துவ தாயும் உள்ளது.

5. சோஷலிச தமிழீழம் வெறும் கற்பனை வாதமே.

6. இவர்கள் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையையும், பொதுவாக தேசிய இனப் பிரச்சனைக்கும் உள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்ளவில்லை.

சரிநாம் இனி இவர்கள் சொன்ன கருத்துக்களை பரிசீலிப்போம். இவர்கள் சொன்னது போல யாரும் இங்கு சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒன்றிணைப்பை குருட்டாம் போக்கில் நிராகரிக்கவில்லை. கடந்த நாலு சகாப்தங்களிற்கு மேலாக இத்தகைய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. ஆயினும் தரகு முதலாளிய அரசின் கீழ், இனவெறி ஆட்சியின் கீழ் சிங்கள இனம் தேசிய ஒடுக்கும் இனமாயும், தமிழ் இனம் ஒடுக்கப்படும் தேசிய இனமாயும் வளர்ந்துள்ளது. இன்றைய நிலையில் ஒடுக்க படும் ஒடுக்கும் இனங்களில் உள்ள உழைக்கும் மக்களிற்கிடையிலான ஒன்றிணைப்பிற்கான சாத்தியம் அறவே அற்றுப்போய் விட்டுள்ளது. சிங்கள உழைக்கும் மக்கள் தரகு முதலாளிய அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவதை மந்தப் படுத்துகின்ற தந்ரோபாயமாகவே இலங்கை அரசு இனவெறி ஆட்சியை நடாத்தி வரு கின்றது. இலங்கையின் யதார்த்தம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையோ, தேசியப்பிரச்சனையோ புரியாதது இலங்கை இயக்கங்களிற்கல்ல மாறாக மாநில அமைப்புக் கமிட்டிக்கே ஆகும். ஒடுக்குகின்ற இனத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உழைக்கும் மக்கள் புரட்சிகர குணாம்சம் மழுங்கி தேசிய வெறியில் அள்ளுண்டு போய்க் கொண்டிருக்கின்றன. யதார்த்த நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒற்றுமைக்குரல் எழுப்புதல் வேண்டும் என்பது கயமைத்தன மான அபிப்பிராயமாகும். சிங்கள மக்களல்ல தரகுமுதலாளிய அரசே தமிழ் மக்கள் எதிரி என்பதை தமிழ்மக்களும் அவர்களது இயக்கங் களும் மிகவும் தெளிவாகவே புரிந்து வைத் துள்ளன. ஒரு சில முதலாளிய பிரிவுகள் தவிர ஏனையவை இந்த விசயத்தில் மிகவும்அக்கறை யாய் உள்ளன. சிங்களமக்களை தேசிய வெறியில் இருந்து மீட்டெடுக்கின்ற அதிர்ச்சி வைத்தி யத்தை அதாவது அவர்களது மாயச்சு கங்கள் தெளிவாகின்ற நிலைமையை ஏற்படுத்து கின்ற செயலை தமிழீழ விடுதலைப்போராட் டமே சாதிக்கமுடியும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமே சிங்கள மக்களது விடுதலைக் கான அத்திவாரமாகவும் அமையப்போகின்ற தென்பது இலங்கை வரலாற்றை நுணுக்கமாக அவதானிப்போர் புரிந்து கொள்ளலாம்.

தமிழீழப் போராட்டதின் வளர்ச்சி சிங் களப் பாட்டாளிகளின் போராட்டத்திற்கும் உதவியாய் இருக்கும். சிங்கள மக்கள் பௌத்தசிங்களவாதத்தில்மூழ்கியிருப்பதாலும் புரட்சிகர இயக்க அழிவினாலும் போர்க்குணாம் சத்தை இழந்துள்ளனர்.

தமிழ் மக்கள் சோசலிசத் தமிழீழம் பற்றி சொல்வதில் எந்தவித கற்பனாவாதமும் இல்லை. மாருக மாநில அமைப்புக் கமிட்டி கருதுகின்ற சோசலிச இலங்கைக்காக, தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் ஒருமித்த சாத்தியம் என்பதுதான் கற்பனாவாதப் போக்காகும். தமிழ் மக்கள் அதாவது ஒடுக்கபடுகின்ற தமிழ் மக்களின் சகல தேசியப் பிரிவினரும் தமிழ் உழைக்கும் மக்களின் தலைமையில் தமிழீழத் தை வென்றெடுத்து தமது சொந்த ஜனநாயக அரசை உருவாக்கும் போது சோசலிசத் தமிழீழத்தை காண்பது ஒன்றும் கடினமான தல்ல. தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டம் சாராம்சத்தில் முழு இலங்கைக்குமான புரட்சியின் ஆரம்பமே என்பது எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்ருகும்.

தமிழ் மக்கள் தமது பிரதான முரண் பாடாக இன்று உணர்வது தேசிய ஒடுக்கு முறையை. இது சிங்கள மக்களுக்கு உரியது அல்ல. எனவே தமிழ் மக்களே தேசிய விடுதலைப் போரில் பங்கு கொள்வது சாத்தியம். ஆயினும் சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவை திரட்டிய பின்னர் போராடுவோம் என தமிழ் மக்கள் பொறுத் திருப்பது சாத்தியமில்லை. இந்தத் தரகு முதலா ளிய அரசின் கீழ் சிங்கள உழைக்கும் மக்கள் தம்முடன் ஒன்று சேரும் வரை தமிழ் மக்கள் பொறுத்திருப்பதென்பது தமது இனத்தை பூரணமாக அழிய அனுமதிப்பது போன்ற தாகும். **சிங்கள தமிழ் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டும் தேவை தற்போதைய பிரதான முரண்பாட்டிற்கு அவசிய மற்றது.** சிங்கள உழைக்கும் மக்களை ஆதரவு சக்தி களாக வென்றெடுப்பதும், அதன்மூலம் அரசுக் கெதிராக கிளர்ந்தெளத் தூண்டுவதும்தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்சியில் தங்கி யுள்ளதால் அதை முன்னெடுப்பதே உடனடி யான பணியாகும். ஆகவே சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒன்ருன திட்டமே தமிழீழ போராட்டம் என்கிறது. எனவே தனியான திட்டமொன்றை இவர்கள் எதிர் பார்ப்பது எந்தவித தர்க்க நியாயமற்றதாகும்.

சிங்கள மக்களை இனவாத அரசின் கையில் விட்டுவைப்பதாக கண்ணீர் வடிக்கும் இவர் கள் சிங்கள மக்கள் தமிழ் மக்களை இந்த அரசு ஒடுக்குவதற்கெதிராக கிளார்ந் தெளவில்லையே என்று கேட்டிருந்தால் தார்மீக தன்மை கொண்டதாக இருந்திருக்கும். அவர்கள் ஏன் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை என்ற ஆய்வை மேற்கொண்டால் இலங்கை பிரச்சனையை இவர்கள் புரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

இறுதியாக ஒரு விடயத்தை கூறிமுடிக் கலாம். மானில அமைப்பு கமிட்டியோ வேறு எவரோ விரும்பினுல் என்ன விரும்பா விட்டால் என்ன தமிழீழப் போராட்டம் தனது திசைவழியில் முன்னேறி செல்லப் போவது, தமிழ்மக்கள் தமது தேசிய இன ஒடுக்கலில் இருந்து விடுபட்டு தமது சொந்த ஜனநாயக அரசை உருவாக்கப் போவது, நிச்சயம். எனவே தமிழ் மக்களின் போராட் டம் ஏன் உருவாயிற்று அதற்கான யதார்த்த நிலை என்ன வென்று ஆராய்வதன் மூலம் அவர்கள் போக்கை புரிந்து கொள்ள முயலா மல் இரண்டொருபிரிவினரின் கருத்துகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துக் கொண்டு அவர்களின் போராட்டங்களே தவறுஎன புத்தகப்பூச்சிகளாய் பேசிக் கொள்வது பற்றி யாரும் அக்கறைப்பட தேவையில்லை.

மாநில அமைப்புக் கமிட்டியினர் இனி மேலாவது யதார்த்தத்தில் இருந்து முடிவுக்கு வரவேண்டும். மக்கள் மத்தியில் இருந்து கற்றுக் கொள்ளவேண்டும். அங்குதான் மார்க்சியத்தின் ஊற்றுகண் இருக்கின்றது.

கடினமான புத்தகங்களிலும், நீண்ட மேற்கோள்களிலும் அல்ல என்று புரிந்து கொள்வார்களாக.

**அனைத்து ஒடுக்கப்படும் தமிழ் தேசிய பிரிவினரே ஒன்று சேருங்கள்!**

**தரகு முதலாளிய ஜே. ஆரின் இனவெறி அரசை ஒழிப்போம்!**

**தமிழீழ விடுதலையை! வென்றெடுப்போம்**

O

# வரலாற்றில் இருந்து சில படிப்பினைகள்

மனச்சாட்சிகளை விலை பேசுவதற்காக அரசியல் வாதிகள் பல லட்சங்களை செலவு செய்த போது தங்கள் நாட்டின் பெருமையை காப்பாற்ற விரும்பிய ஒரு சில இளைஞர்களோ நிதி வசதியில்லாததால் மரணத்தை சந்திக்க நேரிட்டுள்ளது. இந்த நாடு இறுதி வரையிலும் பெருந்தன்மையான 'உறுதியான மனிதர்களால் ஆளப்படவில்லை. மாறாக நமது பொது வாழ்க்கையின் கசடுகளான அரசியல் வியாபாரிகளால் ஆளப்படுகிறது என்பதைத் தான் இது சுட்டிக்காட்டுகிறது.

எங்களது நோக்கங்களின்படி, நேற்றைய அல்லது இன்றைய அரசியல் வாதிகள் ஒருவரிடமும் ஒரு சல்லிக்காசுகூட நாங்கள் கேட்டதில்லை என்பதை நான் மிகுந்த பெருமையுடன் உங்களிடம் கூறிக்கொள்கிறேன். எங்களது தேவைகள் ஒப்பற்ற தியாகங்களால்இணைந்தது தான். உதாரணமாக, 'இந்த நோக்கத்திற்காக' தனது வேலையை விற்றுவிட்டு, எல்பிடியோ சோசா [ELbidio Sosa] 300 பெசோக்களை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார். பெர்னண்டோ கெனர்ட் (Fernandochead) தனக்கு வாழ்வழிக்குப் புகைப்படக் கருவியை விற்றார்; பெட்ரோ மரேரோ [bedro Marrero) தனது பலமாதச் சம்பளத்தையும் இதற்க்காக அளித்தார்; தனது வீட்டிலிருந்த நாற்காலிகளை விற்க அவர் முனைந்த போது நாங்கள் அதை தடுத்து விட்டோம்; அஸ்கார் அல்சால்டி [Oscar Alcalde] தனது மருந்துக் கூடத்தை விற்றார்; ஜீஸஸ் மோன்தான் (Jesus Mantane) தனது 5 ஆண்டு சேமிப்பு தொகையை அளித்தார்; இதைப் போன்றே ஏனையோர் பலரும் தங்களிடம் இருந்த சிறு பொருட்களைக்கூட இந்த நோக்கத்திற்காக அளித்தார்கள்.

இது போன்ற செயலைச் செய்ய ஒருவருக்கு தனது நாட்டின் மீது மகத்தான நம்பிக்கை இருக்க வேண்டும். கொள்கை பிடிப்பால் நிகழ்ந்த இந்த நடவடிக்கைகளின் நினைவு இந்த வாதத்தின் கசப்பான தொரு அத்தியாயத்திற்கு என்னை இட்டுச் செல்கிறது. கியூபாவை அடக்கு முறையிலிருந்தும், அநீதியில்ருந்தும் விடுதலை செய்ய விரும்பியதற்க்காக இந்தக் கொடுங் கோலாட்சி, அவர்களை தங்களது உயிர்களை பரிசாகக் கொடுக்க வைத்தது.

''வரலாறு என்னை விடுதலை செய்யும்''
ஃபிடல் காஸ்ட்ரோ
நீதிமன்ற உரை

**குறிப்பு:-**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க, சரியான இயக்கமொன்றை உருவாக்க பொதுமக்களின் உதவியும் பலமும் தான் முக்கியமானது. சிறுதுளி பெரு வெள்ளம் என்ற வகையில் பொது மக்களின் சிறு சிறு உதவிகள்கூட முக்கியதுவம் உடையயவை. இயக்கங்களும் பொது மக்களில் தங்கி சார்ந்து நிற்கவேண்டும். அதேபோல் பொது மக்களும் தமது கடமையை உணர்ந்து இயக்கங்களிற்கு தம்மாலான உதவியை செய்யவேண்டும். கொள்ளை மூலமே சகலவற்றிற்கும் தீர்வுகாணமுடியும் என்ற தவறான கருத்திற்கு மேற்படி பிடல் காஸ்ட்ரோவின் உரை விடையாக அமைகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டமும், கலை இலக்கிய வாதிகளும்

எமது தேசிய விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் இன்றைய கட்டத்தில் எமது கலை இலக்கிய படைப்பாளிகளின் பங்கும் பணியும் என்ன என்பது பற்றிய ஒரு சிந்தனை மிகவும் அவசியமானதாகும்.

உண்மையில் கலை இலக்கியங்கள் மனித வாழ்வின் அனுபவங்களின், போராட்டங்களின் ஒரு பிரதிபலிப்பாகவே தோன்றுகிறதாயினும், கலை இலக்கியங்கள் மனித வாழ்வின் போக்கில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளையும் செய்கின்றன. மனித வாழ்வின் கலாச்சாரம் பண்பாடு என்பவை கலை இலக்கியங்களால் செழுமையுறுகின்றன. கலாச்சாரம் பண்பாடு என்பவை குறிப்பிட்ட ஒரு சமுகவாழ்வில் மனிதனது அனுபவங்களின் தொகுப்பினடியாக பிறந்து செழுமையுற்று, பின் அவையே அந்த சமூக வாழ்வின் இயல்பான நியதிகளாகி விடுகின்றன. ஆனல் சமூக வாழ்வானது மாறும் போது இந்த இயல்பான கலாச்சாரப் பண்பாட்டு தன்மைகளும்உடனடியாக மாறி விடுவதில்லை. இவை மிகவும் ஆறுதலாகவே மாறும் இந்த மாற்றக் காலத்தில் புதிய சமுதாய வாழ்வுக்கும் பழையதற்குமான வாழ்வியல்அனுபவத்தொகுப்பினடியாக தோன்றும் கலாச்சாரம், பண்பாடுகளிற் கிடையில் போராட்டம் நடைபெற்று வருகின்றது. ஆனல் இப்போராட்டத்தில் புதிய கலாச்சாரம் பண்பாடு என்பவையே ஜெயிக்கின்றன. இதுதான் வரலாற்று நியதியாகும். இதனல் தான் ஒரு காலகட்ட சமுதாய வாழ்வு முறையினடியாக கலாச்சாரம், பண்பாடு என்பன மறைந்து புதியகலாச்சாரம்,பண்பாடு என்பன தோன்றி வருவதை நாம் காண்கிறேம். இந்த பழைய கலாச்சாரமானது, புதிய கலாச்சாரத்திற்கு எதிரானதாக அதை தடுப்பதாக இருக்கும். அதாவது அடிப்படையில் புதிய சமுதாய வாழ்வை எதிர்ப்பதாக இருக்கும். புதிய சமுதாய மாற்றத்தை தடுத்து, பழைய வாழ்வு முறையினையே பேண முயலும். ஆனல் சமுதாயமானது புதிது புதிதாக முன்னேறுகிறதாகும். ஆகவே இதை தடுக்கிற போக்கை கொண்டுள்ள பழைய கலாச்சாரம் பிற்போக்கானதாயும், வரப்போகிற சமுதாய மாற்றத்தை ஏற்கும் கலாச்சாரம் முற்போக்கானதாயும் இருக்கும்.

கலை இலக்கியங்களிலும் இது தவிர்க்க முடியாததாக இருக்கும். பிற்போக்கு கலாச்சாரத்தை பேணும் கலை இலக்கிய வடிவங்கள் பிற்போக்கு தன்மை கொண்டவையாயும், முற்போக்கு கலாச்சாரத்தை பேணுபவை முற்போக்கு கலை இலக்கியங்களாகவும் இருக்கும். எனவே எப்போதும் சமுதாய வளர்ச்சிப் போக்கில் அக்கறையுள்ள முற்போக்கை ஆதரிக்கிறதாக முற்போக்கு கலை இலக்கியங்கள் அமைகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இன்றைய நிலையில் அவர்களது விடுதலைப் போராட்டமானது ஒரு தவிர்க்க முடியாத சமுக வளர்ச்சியோடொட்டிய போராட்டமாகும். இந்தப் போராட்டத்தின் வெற்றி இப்போதுள்ள இந்த சமுக அமைப்பு பரிபூரணமான மாற்றத்துக்குள்ளாகும் போதே இறுதி வெற்றியடைந்ததாக கருதப்படும்.

தமிழ் மக்கள் இந்தப் போலி ஜனநாயக நவபாசிச அரசிலிருந்து விடுபட்டு தமது சொந்த ஜனநாயக அரசை அமைக்கின்ற முற்போக்கான போராட்டம் எமது தமிழீழப் போராட்டமாகும். எனவே, மக்கள் ஜனநாயக அரசின் கீழ் எந்தவித ஒடுக்குமுறைகளும் அற்ற சமத்துவமான வாழ்வு முறைக்கான போராட்டம் நடைபெறும். இதுவே அந்த புதிய வாழ்வு முறையாகும். எனவே இந்த சமுதாய மாற்றத்தினையொட்டிய புதிய கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவதும் பழைய கலாச்சாரத்தை உடைத்தெறிவதும் ஒரு முற்போக்கான பணியாகும். எனவே இந்த நிலையில் எமது கலை இலக்கிய படைப்பாளிகளின் பணி என்ன? எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் எத்தகைய பங்களிப்பை நல்க வேண்டும்? விடை மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலப்பமானது. தேசிய விடுதலைப் போராட்டம் என்ற முற்போக்கான போராட்டத்திற்காக மக்களை அணிதிரட்டும் பணியில் உழைத்தல் வேண்டும். ஆனால் இப்படி மட்டும் சொன்னால் போதாது இது செயல்ரூபமெடுக்கையில் மிகவும் ஆழமான வேலைகளின் அவசியத்தை வலியுறுத்தும். உண்மையில் வாழும் கலாச்சாரப் போக்கானது மக்களை நிலைமைகளுடன் சமரசம் செய்யும் விதத்தில் உருவாக்கப் பட்டுள்ளது. இது இந்த மாற்றத்தை ஆதரிக்க வில்லை. இது மக்களை மதமாக்கி, போராட்டத் தன்மை குறைந்தவர்களாக்கி வைத்திருக் கின்றது. இந்த நடைமுறைக் கலாச்சாரம் மக்களிடம், துணிவு, நம்பிக்கை போன்ற வற்றை அகற்றி பொம்மைகளாக்கி வைத்துள்ளது எனவே இத்தகைய போக்கை உடனடியாக உடைக்கவேண்டும்.

அதாவது இந்த வாழும் சமூக அமைப்பின் மீதான நம்பிக்கைகளை, பிரமைகளை உடைக்க வேண்டும். அதன் மூலம் மக்களை போராட்டத்திற்கான உணர்வூட்டப்பட்ட வர்களாக மாற்ற வேண்டும். புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்கும் சக்தியாக அவர்களை வளர்த்தெடுக்கவேண்டும். இது இலகுவான பணி

கலை மக்களுக்கு சொந்தமானது
அது உழைப்பாளி மக்கள் மத்தியில்
ஆழமாகச் செலுத்தப்பட வேண்டும்
அது மக்களுக்குப் புரியும் படியாக
அவர்கள் நேசிக்க கூடியதாக
இருக்க வேண்டும்
அவர்களின் உணர்ச்சிகள், சிந்தனைகள்
சித்த்தை உயர்த்த வேண்டும்.

—லெனின்—

யல்ல. ஆனால் அவசியமான பணி. மக்களோடு மக்களாய் வாழ்ந்து அவர்கள் மீது உண்மை யான நேயம் கொண்டு அவர்கள் ஈடேற்றத்திற் காக உழைக்கிற உறுதி அவசியம். இந்த நிலை இருந்தாலே எம்மால் முற்போக்கான கலை இலக்கியங்களை மக்களுக்காக படைத்தளிக்க முடியும்.

உண்மையில் கலை இலக்கியங்கள் மக்களுக் காக மக்களின் வாழ்வு நலம் பெறுவதற்கான வையே. எனவே அத்தகைய மக்கள் கலை இலக்கியங்கள், மக்களின் உண்மையான நலனில் அக்கறை கொண்டு படைக்கப்பட வேண்டும். இந்த நோக்கில் இன்றைய எமது படைப்பாளிகளின் பிரதான பணி தமிழ் தேசிய கலை இலக்கியங்களை உருவாக்குதலும், மக்கள் மத்தியில் அவற்றை பரவலாக்குவதும், அதன் மூலம் மக்களை போராட வென்றெடுப் பதுமாகும்.

கலாச்சார வளர்ச்சியற்ற மக்களால் போராட முடியாது. கலாச்சாரமற்ற படை மந்தபுத்தியுள்ளபடையே. அதனால் இறுதி வரை போரிட முடியாது. தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்கும் போக்கில் கலை இலக்கியங்கள் செயற்படுதல் வேண்டும். அந்த ரீதியிலேயே இன்றைய சகல கலை இலக்கிய படைப்பாளிகளும் செயல்பட வேண்டியுள்ளனர்.

தமிழ் கலை இலக்கியவாதிகள் அனைவரும் இந்த முற்போக்கான ஒரு நோக்கம் கருதி ஒரு புரட்சிகரமான ஸ்தாபனமாக ஒன்று திரள் வதும் தமிழ் தேசிய கலை இலக்கியத்தை வளர்க்கும் ஒரு ஸ்தாபனமாக இயங்குவதும் மிகவும் அவசியமானது ஆகும். கலை இலக்கிய வாதிகளின் இந்தப் பணி வெற்றிபெறுமானால், தமிழீழப் போராட்டம் நிட்சயம் வெற்றி பெற்றே தீரும். இன்றைய நிலையில் தமிழ் மக்களை அவர்களது பிரமைகளிலிருந்தும் களைந்து போராட்டத்திற்கு தயார் படுத்தும் பணியே கலை இலக்கிய வாதிகளின் பிரதான பணியாகும். அது செவ்வனே செய்யப்படு மானால் கவிஞர் வரிகளில் சொன்னால், ஒரு நாள் வரும், எழுது கோல்நிற்கும், இலக்கியம் தானாகவே யுத்தத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் புதிய தேசிய கலாச்சாரத்தை உருவாக்க விரும்புகின்றோம். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? குறிப்பிட்ட எந்தவொரு கலாச்சாரமும், குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல்-பொருளாதார நிலைமைகளின் பிரதிபலிப்பே. ஆனால் கலாச்சாரம், சமூகத்தின் அரசியல், பொருளாதார நிலைமைகளின் மீது பெரும் செல்வாக்கு வகிக்கிறது. பொருளாதாரம் என்பதுதான் சமூகத்தின் அடித்தளம் அரசியல் என்பது பொருளாதார அமைப்பின் உருட்டித் திரட்டப்பட்ட வடிவமாகும். கலாச்சாரத்திற்கும் சமூகத்தின் அரசியல் பொருளாதாரத்திற்கும் இருக்கும் உறவு முறைகளையும் பற்றிய நம் அடிப்படையான கண்ணோட்டம் இதுதான். குறிப்பிட்ட காலத்தின் அரசியல் பொருளாதாரம் தான் கலாச்சாரத்தை முதலில் நிர்ணயிக்கிறது. அதற்குப் பின்னர்தான் கலாச்சாரம் இயங்க ஆரம்பித்து குறிப்பிட்ட பொருளாதார நிலைகளிலே தன் செல்வாக்கைச் செலுத்துகிறது. மார்க்ஸ் சொல்கிறார்.

"மனிதர்களின் வாழ்நிலையை அவர்களின் உணர்வுகள் நிர்ணயிப்பதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களின் சமூக வாழ்நிலைமையே உணர்வுகளை நிர்ணயிக்கிறது.

அவர் மேலும் கூறுகிறார்.

உலகத்தில் உள்ள தத்துவவாதிகள் இதுவரை உலகைப்பல் வேறு வகைகளில் விளக்கிக் கூற மட்டுமே செய்துள்ளனர். ஆனால் முக்கியமான அம்சம் உலகை எப்படி மாற்றுவதென்பதுதான்.

(மனிதவரலாற்றிலே) உணர்வுகளுக்கும் வாழ்நிலைமைக்குமிடையே உள்ள உறவுமுறை பற்றிய கேள்விகளுக்கு சரியான முறையில் பதிலளித்த விஞ்ஞான பூர்வமான விளக்கம் இதுவேயாகும். இது தான் செழுமைப்படுத்தப்பட்ட புரட்சிகரமான அறிவுக் கொள்கைக்கு அடிப்படையான கோட்பாடுகள் ஆகும். இதையே தான் பின்னர் லெனின் மிகவும் விரிவு படுத்தினர் சீனக்கலாச்சாரப் பிரச்சனைகளை நாம் விவாதிக்கும் போது இத்தகைய அடிப்படை கோட்பாடுகளை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே நாம் ஒதுக்கி அப்புறப்படுத்த விரும்பும் கலாச்சாரம் பழைய கலாச்சாரம். நமது நாட்டின் பழைய பொருளாதார அரசியல் அமைப்பிலிருந்து தனித்துப் பிரிக்கப் பட முடியாதது என்பதும், நாம் உருவாக்கும் நோக்கம் கொண்ட புதிய கலாச்சாரமானது புதிய அரசியல், புதிய பொருளாதாரம் ஆகியவற்றிடம் இருந்து தனித்துப் பிரிக்கப்பட முடியாதது என்பதும் மிகத் தெளிவாகும். பழைய அரசியலும் பழைய பொருளாதாரமுமே பழைய கலாச்சாரத்தின் அடிப்படையாகும். புதிய அரசியலும் புதிய பொருளாதாரமுமே புதிய கலாச்சாரத்தின் அடிப்படையாகும்.

—மாவோ—

# நூல் அறிமுகம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றி நண்பர் சமுத்திரனால் எழுதப்பட்டநூல், பெங்களூரில் உள்ள "காவ்யா" வெளியீட்டாளர் களால் வெளியிடப்பட்டுள்ளது. நீண்ட காலமாக அரசியல் இயக்கங்களில் ஈடுபாடு கொண்டவரும், சமூக விஞ்ஞான ஆய்வாளரும் விமர்சகருமான சமுத்திரன், கடந்த 1983 யூலை கலவரத்தின் பாதிப்புக் காரணமாக ஜப்பானில் இருந்து தனது எண்ணங்களையும் "சிங்களப் பெருந்தேசிய இனவாதம் - அதன்அடிப்படைகளும் மேலாதிக்கமும்" என்னும் கட்டுரை மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் போராளிகளிடையே உள்ள தத்துவப் பற்றுக்குறையை போக்க இந்த நூல் உதவும் என நம்பலாம் ரசிக்கக் கூடிய எழுத்து நடையில் எழுதப்பட்ட இந்தநூல், சகல ஈழப் போராளிகளும் வாசித்துப் பயனடையக் கூடியவொன்றாகும். இந்நூல் பற்றிய விமர்சனம் அடுத்த 'இலக்கு, இதழில் இடம் பெறும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்ன நடக்குது இங்கே?

## 1. மீண்டும் வேதாளம்...

கிட்டத்தட்ட மூன்றுமாத காலமாக பத்திரிகைகளில் தவறாது அடிபட்டுவந்த "பேச்சுவார்த்தை" தொடங்கி விட்டது. கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற வரலாற்றுப் புகழ் பெற்ற பேச்சு வார்த்தை தொடங்கிவிட்டது. தமிழ்மக்களை அவர்களது இன்னல்களிலிருந்தும் உய்விக்கவந்த அவதார புருஷர்கள், 'ஆசியாவின் தலைசிறந்த அரசியல் ஞானி' தார்மீகவான் அதியுத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜனவர்த்தனாவின் கருணைகடாட்சத்தை, இந்தியாவின் அருள்பாலிப்பின் பயனைப் பெற்றுக் கொண்டபின் தமது பேச்சுவார்த்தைகளை தொடங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இனியென்ன? தளபதி அமிர்தலிங்கத்தின் தாமிரக்குரலும், தலைவர் சிவாவின் கம்பீர முழக்கமும் சர்வதேச மாநாட்டு மண்டபச் சுவர்களில் கணீரெனப்பட்டு எதிரொலிக்காதா என்ன? தமிழ் மக்கள் வாழ்வு விடிந்தது என்பதற்கு இனியென்ன சான்று வேண்டும்? சிங்களத் தலைவர்களை எமது தலைவர்கள் தமது வாதத்திறமையால் தலைகுனிய வைக்கும் ரம்மியமான காட்சியை விடவா தமிழ் மக்களின் விடுதலை பெரிய விசயமாகிப் போய்விட்டது. தமிழ் மக்களின் ஈடேற்றத்திற்காக எங்கள் தலைவர்கள் தொண்டை கிழியப்பேசப்போகிற இந்தப் பேச்சுக்கள் உலகமெல்லாம் எதிரொலித்து, தமிழனின் பெருமையை பறைசாற்றாதா என்ன? — கொஞ்சம் எரிச்சலாக இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள் இப்படி நாங்கள் சொல்லவில்லை. கொழும்பு பத்திரிகைகளும் கூட்டணி வீரர்களும் இப்படி சொல்லத் தொடங்கியிருப்பதைத்தான் சுருக்கமாக இங்கு குறிப்பிட்டோம் [எங்கள் "அழகு தமிழ்த்திறமை" குறைவு காரணமாக சில வேளை மேலே நாம் எழுதியவை, தலைவர்களின் உண்மையான சிறப்பை வெளியிட முடியாமல் போய்விட்டிருந்தால் மன்னித்துக் கொள்ளும்படி கூட்டணி விடுதலை வீரர்களைக் கேட்டுக் கொள்கிறோம்]

1977ல் தேர்தல் முடிந்ததும் பயங்கரமான இனவாத குரல் எழுப்பியவனும், கலவரத்தை தூண்டிவிட்டவனுமான ஜே. ஆர். ஜயவர்த்தனா, 1983ல் யூலைக்கலவரங்களின் அசல் சூத்திரதாரியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, வெலிகடைச் சிறையில் துடிக்கப் பதைக்க எமது சக போராளிகளை கோரமாக கொலை செய்வித்த ஜே. ஆர், தமிழரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை, அவர்கள் வாழ்ந்தாலென்ன இறந்தாலென்ன என்று திமிராக குரலெழுப்பிய ஜே. ஆர், இன்று தமிழ் மக்களுக்கு 'நியாயமான தீர்வு' வழங்க மாநாடு கூட்டுகிறானென்றால் அந்த 'நியாயமான' என்ற சொல்லை எப்படி நாம் அர்த்தப் படுத்திக் கொள்ள முடியும்? தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை என்று நிபந்தனை எழுப்பும் ஜே. ஆரின் நியாயமான தீர்வு என்னவாக இருக்கமுடியும்? பேச்சு வார்த்தை தயார் செய்யும் போதே, சிங்கள மக்களுக்கோ நான் ஒரு போதும் தீங்கு இழைக்கமாட்டேன் என்று திரும்பத்திரும்பக் கூறும் ஜே. ஆரிடம் என்ன நியாயமான தன்மை இருக்கமுடியும்?






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே. ஆரின் அகராதியில் நியாயம் என்றால், தமிழர்களை அடக்குதல், கேள்வி முறையற்று சிறையிலடைத்தில், சிறையிலே சித்திரவதை செய்தல், தெருவிலே தெருநாய்களைப் போல் தமிழர்களைச் சுட்டுப் பொசுக்குதல் தமிழ் மக்களின் குடிசைகளை கொளுத்துதல், நிலங்களைப் பறித்தல், வேலைவாய்ப்பை, கல்வி வசதிகளை நிறுத்துதல் 'தாடிவைக்க' கூட சுதந்திரம் இல்லாது செய்தல் சொந்த பூமியிலேயே வீடுகளை, வாசிக சாலைகளை கொளுத்துதல் கொள்ளையடித்தல் ... என்று ஒரு நீண்ட பட்டியலில் கருத்து இருக்கும் போது அதை தெளிவாக தெரிந்து கொண்டும் பேச்சு வார்த்தை நடாத்த சம்மதிப்பது எப்படி பொருத்தமாக இருக்கும்.

உண்மையில் தமிழ் மக்களின் இன்றைய பிரச்சனை என்ன? அது பேச்சு வார்த்தையில் தீர்க்கக்கூடியது தானா? இதுபற்றிய தெளிவு இல்லாமல் இந்த பேச்சுவார்த்தை பற்றி எந்த வித முடிவுக்கும் வர முடியாது.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையானது ஒரு தேசிய இன ஒடுக்குமுறை. இது இலங்கை அரசுக்கு அது தன்னை பாதுகாத்துக் கொள்ள அல்லது நிலை நிறுத்திக் கொள்ள தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்தப் பிரச்சனை ஒரு நேச முரண் பாடல்ல. இது ஒரு எதிரி முரண்பாடு தமிழ் மக்களின் விடுதலை, அவர்கள் மீதான ஒடுக்குமுறை ஒரு எதிரி முரண்பாடாகையால் போராடியன்றி தீர்க்க முடியாது. தமிழீழ விடுதலையே இதற்கு ஒரே தீர்வாக இருக்கமுடியும். இந்த ஜே. ஆரின் அரசு தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ந்து கொண்டு போகும் வேகத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைக்குமாயின் தனது நவபாசிச ஆட்சிக்கு இறுதிக் கட்டம் ஆரம்பித்து விடும் என்பதே, அது பேச்சு வார்த்தைக்கு இணங்கியதற்கான காரணமாகும். தமிழ் மக்கள் விடுதலை பெறுவதன் மூலம் சிங்கள மக்களும் தமது விடுதலைக்காக இந்த அரசுடன் போரிட ஆரம்பிக்கும் ஆபத்து உண்டு என்பதை அறிந்தே இதை தடுக்க முயற்சி செய்து வருகின்றார். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை திசை திருப்புவதும் அதை ஒரு வகையில் மந்தப் படுத்துவதும் ஜே ஆருக்கு அவசியமாக இருக்கின்றது. இதனாலேயே கூட்டணியுடன் சமரசப் பேச்சுக்கு முன்வந்துள்ளான்.

பேரம் பேசலில் என்றுமே சளைக்காத தரகர் கூட்டமான கூட்டணி பண்டா செல்வா ஒப்பந்தம் அனுபவத்தின் பின், டட்லி—செல்வா ஒப்பந்தத்தின் பின், மாவட்டசபை ஏமாற்றத்தின் பின் மீண்டும் பேரம் பேச துணித்திருக்கின்ற தென்றால், அது உண்மையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டதில் அதற்குள்ள அக்கறையற்ற போக்கேயன்றி வேறல்ல. தீர்வு எவ்வளவுதான் கவர்ச்சிகரமானதாக வழங்கப் பட்டாலும், நிட்சயம் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதே நடைபெறும். கூட்டாணி இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திரும்பவும் தனது ஏமாற்று விளையாட்டை தொடங்கும். ஜே. ஆர். ஆரசு இன ஒடுக்குமுறையை செய்வது வெறும் மனவிருப்பினப் படையில் அல்ல அது தவிர்க்க முடியாத வரலாற்றுப்போக்கினடியாக, சிங்கள தேசிய இனம் பெருந்தேசிய வாதத்தில் சிக்சிய காரணமாக செய்யப்படுவது. எனவே, எந்தத் தீர்வும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை குறைக்கப்போவதில்லை. அது தொடரத்தான் போகின்றது எனவே இந்தப் பேச்சுவார்த்தை எந்தவிதமான பயனும் அற்ற வெற்று வெளி வேசமே.

கூட்டணியைப் பொறுத்தவரை அது தமிழீழ விடுதலைப்போராட்டத்தை இந்த பேச்சுவார்த்தை மூலம் காட்டிக் கொடுத்ததாக நாம் சொல்லமாட்டோம். ஏனென்றால், அது விடுதலைப்போராட்டம் என்று சொல்வதெல்லாம், தனது வர்க்க அதிகாரத்திற்கான ஒரு வாய்ப்பு பெறுதலையே. எனவே, அது திரும்பவும் பேசத்தொடங்கியிருப்பதுகாட்டிக் கொடுப்பல்ல அது அதன் இயல்பான தன்மை. நாய்க்கு குலைக்கத்தான் முடியும் சவாரி செய்ய முடியுமா என்ன?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒன்று நிட்சயம். கூட்டணி இந்த பேச்சு வார்த்தைகள் மூலம் இழந்துவிட்ட தனது செல்வாக்கை மீண்டும் புதுப்பிக்க முனைகின்றது. அது பேச்சு வார்த்தையில் பெறப்போவது தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கான உத்தரவாதத்தை அல்ல. திரும்பவும் தமது ஆதிக்கத்திற்கான ஒரு வாய்ப்பையே, தமிழ்மக்கள் விடுதலையை போராடித்தான் பெறவேண்டும். தமது அரசொன்றை உருவாக்குவதன் மூலமே அவர்கள் தமது விடுதலையை பெறமுடியும். வெற்றுப் பேச்சு வார்த்தைகளால் எந்தவிதமான முன்னேற்றமும் கிடைக்கப்போவதில்லை. ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 2. திட்டமிட்ட குடியேற்றமும் பிரதேசப் பறிப்பும்—

தமிழ் மக்களின் தேசியத் தன்மையை முற்றாக இல்லாதொழிப்பதில் இந்த ஐ. தே. க. அரசு மிகவும் கவனமாக செயல்பட்டு வருகின்றது. அதன் ஒரு படியே இந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் பிரதேசப் பறிப்பும். அண்மையில் வடமுனையில் புத்த பிக்குகளின் தலைமையில் மந்திரிகளின் அனுசரணைகளுடன் திட்டமிட்டு நடாத்தப்பட்டதை நாம் அறிவோம். தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பறித்து அவர்களின் வயல்களில் மமதையுடன் விதைப்பும் தொடங்கியிருந்தார்கள் இந்தக் குடியேற்றக்காரர்கள் சிங்களப் பேரினவாத வெறியுடன் பகிரங்கமாக அந்த அடாத செயலை பௌத்த குழுக்கள் முன்னின்று நடாத்தினர். குடியேற்றக்காரர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டது. இதனால் கிட்டத்தட்ட 300 குடும்பங்கள் தமது நிலத்தை இழந்து அஞ்சி ஒதுங்கியுள்ளனர்.

அதிஉத்தம ஜனாதிபதி பகிரங்கமாக இதை கண்டித்த போதும், தனது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இதை தடுக்கும்படி கேட்டபோதும் வடமுனைக் குடியேற்றம் தடுக்கப்படவில்லை. மாறாக அவர்களை அகற்ற போதிய சட்டம் இல்லையென சொல்லிக் கொண்டு புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்தார்கள்.

இந்த சட்டத்தை அறிமுகம் செய்கையில் சகல அத்துமீறல் குடியேற்றங்களையும் இது தடுக்கும். இது இலங்கையின் எல்லா பாகங்களுக்கும் செல்லுபடியாகும். என்று திரும்பத் திரும்ப சிரேஸ்ட அமைச்சர்களால் சொல்லப்பட்டது. உண்மையில் அதன் அர்த்தமென்ன? பாராளுமன்றத்தில் கொண்டுவரும் சட்டம் நாடு முழுவதும் செல்லுபடியாகுமென திரும்பத் திருப்ப கூறவேண்டிய அவசியமில்லை.

உண்மை மிகவும் தெளிவானது கலவரங்களால் பாதிக்கப்பட்டு இருக்க இடமின்றி அகதிகளாக ஓடிவந்த மலையக மக்களின் குடியேற்றம் பற்றியே இவர்கள் குறிப்பிடுகிறார்கள். மலையக மக்களின் குடியேற்றத்தை அத்து மீறிய, திட்டமிட்ட குடியேற்றமாக இவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள். அநுரா பண்டாரநாயக்கா கூட பாராளுமன்றத்தில் பேசும் போது அடிமைகளாய் வந்த இந்தியர்க்கு காணி இருக்கிறது. சிங்களவருக்கு நிலமில்லை என்று பச்சை இனவாதம் பேசத் தொடங்கி விட்டார்.

இந்த போக்குகள் கிளிநொச்சி, வவுனியா, திருகோண மலைப்பகுதிகளில் குடியேறிய மலையக மக்களை அடித்து விரட்ட அரசு நடவடிக்கை எடுப்பதற்கான முஸ்தீபுகளே ஆகும். இந்தச் சட்டம் வடமுனை, குடியேற்றத்திற்காகவல்ல மாறாக மலையக மக்களின் குடியேற்றத்திற்காகவே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தேவநாயகம் காட்டுக் கத்தல் கத்தினாலும் சரி, ஜே. ஆர். பத்திரிகை அறிக்கை விட்டாலும் சரி சிங்களப் பேரின வாதிகளின் போக்கு மாறப் போவதில்லை. தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதில் அவர்கள் தயங்கப் போவதில்லை என்பது தெளிவாகின்றது.

எதிரியிடம் தார்மீகத்தையும் கருணையையும் எதிர்பார்க்கும் அப்பாவிகளைப்பற்றி வேதனைப்படுவதை தவிர வேறொன்றும் செய்ய முடியாது. ஆனால் எதிரியின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க நாம் நிச்சயமாக தயக்கம் காட்ட முடியாது. தமிழ் மக்களது தமிழீழ விடுதலையின் பின் சகல திட்டமிட்ட அரச குடியேற்றங்களும் எந்தவித தயவு தாட்சணியமுமின்றி விரட்டுவது தவிர்க்க முடியாததாகும், சிங்கள மக்கள் இயல்பாக வந்து குடியேறுவதற்கும் அரசு திட்டத்துடன் இது நடப்பதற்கும் நிச்சயமாக வேறுபாடு உண்டு. பிள்ளை யதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3. முஸ்லிம் மக்களுக்கு தனியான அமைப்பு

அண்மைக் காலங்களில் முஸ்லிம் மக்களை தனியான ஒரு அமைப்பாக அணிதிரட்ட வேண்டும் என்ற பிரச்சாரம் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தனியான அமைப்பு இருப்பது போலவே முஸ்லிம் மக்களுக்கும் தனியான அமைப்பு வேண்டும் என்ற இந்தக் குரல் சிங்கள மக்கள் வசதியாக வாழ்கிறார்கள், தமிழ் மக்கள் வசதியாக வாழ்கிறார்கள், எம்மால் மட்டும் அது முடியவில்லை, அதற்கு இந்த அமைப்பின்மையே காரணம் என்ற தொனியில் எழுந்துள்ளது. உண்மையில் இத்தகைய ஒரு போக்கு மிகவும் ஆபத்தான தாகும். இனவாதத்திற்கான வித்துக்கள் இங்கே தான் ஆரம்பமாகின்றன. இந்த குரல்கள் உண்மையில் முஸலிம் மக்களின் நலன் களில் அக்கறை கொண்டல்லாமல், தங்களது சுயநலன்களை பேணும் நோக்கிலேயே சில பிற்போக்கு சக்திகளால் தொடங்கிவிடப் பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் இங்கு ஒரு தனித்துவமான இனமாக இருக்கிறார்கள். என்பது உண்மைதான் அதற்காகவே அவர்கள் ஒரு தனியான அமைப்பாக கட்டாயமாக ஒன்று சேரவேண்டு மென்பதில்லை. ஏனெனில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் நேரடியாக தமிழ் மக்களது அதே பிரச்சனைகளை எதிர்நோக்கு பவர்களாகின்றனர். நிலப்பறிப்பு, ராணுவ அச்சுறுத்தல் என்று அவர்களும் ஒடுக்குமுறைக் குள்ளாக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் தமது பாரம்பரிய பூமியை பாதுகாத்துக் கொள்ள தமிழ் மக்களோடு அணிசேர்ந்து போராடுவது தவிர்க்க முடியாததாகும்.

மக்கள் தமது பிரச்சனைகளுக்காக போராடும் நோக்கில் அணிதிரள வேண்டுமே யன்றி இனங்களுக்காக என்று அல்ல. ஒவ்வொரு அமைப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் தனியாக திரட்டப்பட வேண்டியதில்லை. இது அடிப்படையில் தமிழீழம் விடுதலைப் போராட்டத்திலிருந்து முஸ்லிம் மக்களை பிரிக்கின்ற சதியாகவே தோன்றுகின்றது. இனரீதியான ஒடுக்கல்கள் வரும் அவர்கள் அப்படி அணி திரள்வது அவசியமாகிறது என்பது உண்மையே. ஆனால் இங்கு நிலைமை அவ்வாறு இல்லை. வடக்கு கிழக்கில் அவர்கள் தமிழீழத்தவர் என்ற காரணத்தாலான ஒடுக்குமுறையே நிலவு கின்றது. எனவே முஸ்லிம் மக்கள், தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அணிசேருவதே யன்றி தமக்கென ஒரு அமைப்பை கட்ட முயல்வது முற்போக்கான அம்சம் அல்ல. முஸ்லிம் மக்கள் அப்படி ஒரு அமைப்பில் அணிதிரள்வது கூடத் தப்பில்லை. முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இந்தப் பிற்போக்காளரின் இனவாதப் போக்கில் அணிதிரள்வது ஆபத் தானதாகும். வடக்கு, கிழக்கு முஸ்லிம் மக்கள் தாம் ஒரு அணியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றுவது தவிர்க்க முடியாததாகும்.

## செய்திகள்...

1. அண்மைய இனக்கலவரத்தினால் மோசமான முறையில் பாதிக்கப்பட்டு, செய்வது அறியாது திக்குமுக்காடிக் கொண்டு, மலையக மக்கள் இருக்கும் அதே வேளையில்; மலையக மக்களின் பிரச்சினைகளின் தீர்வுபற்றி, பேசுவதாகக் கூறும், மலையக தொழிற் சங்கத் தலைவர்கள் பலரும் இந்தியா சென்றனர். அவர்கள் அங்கு சென்று தமக்கான நிலபுலங்கள், சொத்துக்கள், வியாபார நிறுவனங்களை நிறுவுவதில் அக்கறையாக ஈடுபட்டுள்ளனர். ஸ்ரீலங்கா அமைச்சர் தொண்டமானுக்கு இலங்கையிலுள்ளது போலவே, இந்தியாவிலும் சொத்துக்கள் உள்ளன. மற்றைய தலைவர்கள் தமக்கான சொத்துச் சேர்க்கையில், இப்பொழுதும் ஈடுபட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் சந்தர்ப் பணத்தில் சுகபோகமாக வாழ்ந்த இவர்கள். தோட்டத் தொழிலாளர்களை இங்கே தவிக்க விட்டு விட்டு தாம் ஓடிச்செல்வதற்கான முன்னேற்பாடாகவே இதனைச் செய்துள்ளனர்.

2. சிங்களப் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமது உயர் கல்வியைத் தொடர முடியாத தமிழ் மாணவர்கள். தம்மை தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகத்துக்கு, மாற்றுமாறு போராடியது யாவரும் அறிந்ததே. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஈழ மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டைத் தமிழக அரசு செய்தது. இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்களின் போராட்டம் வெற்றி பெறாத பட்சத்தில், அவர்களை ஒழுங்கு முறைப்படி, இந்திய பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர ஒழுங்கு செய்திருக்கலாம். இது ஒரு நிரந்தரத்தீர்வாக நாம் கருதாவிடினும், தற்காலிகமாக அவ்விதம் செய்வது தவறில்லை. ஆனால், எமது தமிழ் தலைவர்களோ தமது உறவினர்களுக்கும், வேண்டியவர்களுக்கும், இவ்விடங்களை நிரப்பியுள்ளனர். இதிலே இப்படி நடந்து கொள்ளும் இவர்கள், இவர்களின் தலைமையில், தமிழீழம் அமையு மாயின் மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக எப்படி இருப்பார்கள்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அராஜகவாதமா ஆயுதப்புரட்சியா?

தமிழீழ விடுதலைப் புலிகள், இயக்கத்தின் பிரச்சார வெளியீட்டு வாரியம் வெளியிட்டுள்ள அரச பயங்கரவாதமும், ஆயுதப் புரட்சியும் என்ற பிரசுரத்தின் திருத்திய பதிப்பு, சில அராஜகக் கருத்துக்களை ஆயுதப் போராட்ட முலாம்பூசி மக்கள்முன்வைத்துள்ளது. விடுதலைப் போராட்டத்தில் தவறான தத்துவங்களை தழுவுபவர்களால் முன்வைக்கப் படுகின்ற தவறான கருத்துக்கள், கண்மூடித்தனமான செயல்பாடுகளுக்கு இடமளித்து மக்களுக்கும், விடுதலைக்கும் ஆபத்தை உண்டு பண்ணக் கூடியவை. எனவே அந்தப் பிரசுரத்தைக் கவனமாகப் பரிசீலிப்பதும், அது முன்வைக்கின்ற தவறான கருத்துக்களை விமர்சித்து நிராகரிப்பதும், விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் கொண்டு செல்ல விரும்பும் ஒவ்வொரு போராளியினதும் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பயங்கர வாதிகள் என்று அழைப்பதையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சில நடவடிக்கைகளை தனிநபர் பயங்கரவாதம் என விமர்சிப்பதையும், விமர்சிக்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ள இப்பிரசுரம் போகிற போக்கில் விதைத்துள்ள அபத்தமான கருத்துக்கள் அதை ஆழமாகப் பரிசீலிப்பவர்களுக்கு மேற்படி கருத்துக்கள் சரியானவையே—அதாவது அவை பயங்கரவாத நடவடிக்கைகளே என்ற கருத்தைத்தான் உறுதிப்படுத்தத் துணை செய்கின்றன என்பதுதான் இப்பிரசுர வெளியீட்டாளர்களின் மாபெரும் தோல்வியாகும். மார்க்சியம், லெனினிசம் என்று இப்பிரசுரம் அடிக்கடி கூறிக்கொண்ட போதும் மார்க்ஸியத்தை திரித்துக் கூறுகின்ற கைங்கரியத்தையே இப்பிரசுரம் செய்கின்றது. மார்க்ஸிய விரோதக் கருத்துக்களை லெனினினதும், மாவோவினதும் மேற்கோள்களுக்குள் மூடி மறைத்துச் சொல்ல முற்பட்ட போதும் இப் பிரசுர ஆசிரியரால் அதனைச் செய்ய முடியாமல் போயிற்று.

நாம் முதலில் இருந்தே பார்ப்போம்.

''...இந்தப் புரட்சிகர அரசியற் போராட்ட சக்தினய அதன் வரலாற்றுப் பரிணமத்தில், அதாவது ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்று வளர்ச்சியில் ஆய்ந்தறிந்து கொள்வதை விடுத்து, பயங்கர வாதம் என்ற பிற்போக்கு முதலாளியக் கோட்பாட்டில் விமர்சிக்க முயல்வது மார்க்ஸிய அணுகு முறையாகாது...''

உண்மையில் இவர் பயங்கரவாதம் பற்றிக் கொண்டிருக்கும் கருத்து அடிப்படையில் தவறானதாகும். பயங்கரவாதம் என்பது மிகவும் மோசமானது என்ற கருத்தை இவர் கொண்டிருக்கிறார். இதன் காரணமாக இவர் எந்தவித ஆய்வுமின்றி இதை ஒரு முதலாளியக் கோட்பாடு என்று சொல்கிறார். பயங்கரவாதம் யாருக்கும் சொந்தமான கோட்பாடல்ல. அது வெறும் செயல் பற்றிய கோட்பாடு. அதைப் பயன்படுத்துகின்ற வர்க்கத்தைப் பொறுத்து அதன் தன்மை வேறுபடுகின்றது. அது ஒடுக்கு முறையாளர்களால் பயன்படுத்தப் படும்போது, பிற்போக்கானதாகவும், புரட்சிகர மக்கள் சக்தியால் பயன்படுத்தப் படும்போது முற்போக்கானதாகவும் இருக்கிறது. இவர்கள் என்னதான் தங்களை ஒரு மார்க்ஸிய அணுகு முறையாளர்களாக கருதிக் கொண்டபோதும், இவர்களது அணுகுமுறை மார்க்ஸியக் கருத்துகளுக்கு முரணாகவே காணப்படுகிறது. இதை மேலே நாம் இன்னும் விரிவாகக் கவனிக்கலாம். இதன் காரணமாகவே இவர்கள் இந்தப் பயங்கரவாதம் பற்றி—அதன் வெறும் வார்த்தை அர்த்தத்தில் மிரண்டு போய் அங்கலாய்க்கிறார்கள். உண்மையான அதன் அர்த்தம் பற்றி தெளிவு இவர்களுக்கு இல்லாததே இதன் காரணமாகும். இவர்கள் அடிக்கடி குறிப்பிடும் லெனின் இந்தப் பயங்கரவாதம் பற்றி என்ன சொல்கிறார் என்று கவனித்தால் இவர்களது தவறு விளங்கும். லெனின் சொல்கிறார். கோட்பாடு ரீதியில் பயங்கர வாதத்தை நாம் ஒருபோதும் நிராகரித்ததில்லை. நிராகரிக்கவும் முடியாது. பயங்கரவாதம் என்பது போராட்ட நடவடிக்கைகளில் ஒருவகையாகும்.

அது படைகளின் குறிப்பிட்ட நிலையையும் குறிப்பிட்ட சூழ் நிலைகளையும் பொறுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தின் குறிப்பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக இருப்பது மட்டுமன்றி இன்றியமையாததாகக் கூட இருக்கலாம்......'' (லெனின் நூல்திரட்டு பக்கம்—1, பக்கம்—63, மாஸ்கோ பதிப்பு 1977) எனவே இவர்கள் பயங்கர வாதத்தை முதலாளியக் கோட்பாடாக வரையறுத்துக் கொள்வது எந்த விதத்திலும் பொருத்த மற்றது. எனவே இக்காரணம் கருதியே, இதைச்சொல்பவர்களை மார்க்ஸிய அணுகுமுறையாளர்கள் அல்ல என்பதை ஒரு போதும் ஏற்க முடியாது. மேலும், அவர்கள் வரலாற்று ரீதியாக இப் போராட்ட வளர்ச்சியை ஆய்வு செய்யாமல், பயங்கர வாதம் என்கிறார்கள் என்றும் இவர்கள் சொல்கிறார்கள் சரி, அவர்கள் செய்யாத ஆய்வை இவர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று கவனிப்போம். இவரது ஆய்வின் முடிவாக இவர் சொல்வதைக் கவனியுங்கள்.

''... அரசியற் போராட்டத்தின் அதி உயர்ந்த கட்டத்தில் அதியுன்னத வடிவமாக எழுவதே ஆயுதப்புரட்சிப் போராட்டமாகும். சமாதான வழி தழுவி மேற்கொள்ளப்படும் ஜனநாயகப் போராட்ட வடிவங்கள் படு தோல்வி கண்டு மக்கள் சக்தியை அணி திரட்டும் ஆன்மபலத்தை இழக்கும் பொழுது, ஆயுதம் தாங்கிய போராட்டம் தவிர்க்க முடியாத சரித்திர நியதியாகி விடுகிறது'' (பக்—6)

இந்த ஆய்வை செய்யாததால் அவர்களை, இவர்கள் மார்க்ஸிய அணுகு முறையாளர்கள் அல்ல என்கிறார்கள். ஆனால் இது ஒரு மார்க்சிய ஆய்வா? இதிலே மார்க்சியம் எங்கே வாழ்கிறது? முதலில், சமாதான வழிதழுவி மேற்கோள்ளப்படும் ஜனநாயகப் போராட்டம் என்கிறாரே, அதைச் சற்றுக் கவனிப்போம். இவர்களது தர்க்கத்தில், ஜனநாயகப் போராட்டமானது சமாதான வழிதழுவியே இருக்க வேண்டும் என்கிறது. இது உண்மையாயின் ஆயுதப் போராட்டம் ஜனநாயகப் போராட்டம் அல்ல என்கிறது. ஜனநாயகம் என்றால் என்ன? என்பதை, இவர் புரிந்து கொண்டுதான் இவர்கள் சொல்கிறார்களா என்ற சந்தேகத்தை இது கிளப்புகின்றது. ஆயுதப் போராட்டம் ஜனநாயகப் போராட்டம் அல்லவாயின் அது மக்கள் விரோதமானது என்கிறது. பயங்கர வாதம் பற்றிய இவர்களது அர்த்தத்தில், இவர்களது விவாதம் இவர்களது தொடக்க இடத்திற்கே கொண்டு வந்து விடுகிறது. ஆயுதப் போராட்டத்தை ஜனநாயக ரீதியில்லாத மக்கள் விரோத நடவடிக்கை எனக்கூறும் இவர்கள், பயங்கர வாதிகள் என்று சொன்னவர்களை விடவும், விளக்கமாக எதை நிரூபிக்கிறார்கள்.

ஆனால் தவறான ஆய்வை மேற்கொண்டு அதன் தற்கரீதியான முடிவுக்குவராது ஏதோ ஒரு தாம் முன் கூட்டியே நினைத்த முடிவுக்கு வருகின்ற தன்மை கொண்ட இவர்களால் சரியான ஆய்வைச் செய்ய முடியவில்லை. உண்மையில் ஆயுதப்போராட்டம் மக்கள் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க நடாத்துகின்ற ஜனநாயகப் போராட்டமே. முரண்பாடு, எதிரி முரண்பாடாக கூர்மையடைகையில் சமாதான வழிகளால் அது தீர்க்கப்பட முடியாமல் போகவே மக்கள் ஆயுதம் ஏந்துகிறார்கள். எதிரி முரண்பாட்டை ஆயுதப் போராட்டம் மூலமே தீர்க்க முடியும் வேறெந்த முறையிலும் எதிரிமுரண்பாடு தீரவழியில்லை. எனவேதான் ஆயுதப் போராட்டம் பிறக்கின்றது. இந்த விஞ்ஞான பூர்வமான ஆயுதப் போராட்டத் தன்மையை புரிந்து கொள்ளாமல், அதை நியாயப்படுத்தும் நோக்கில் விவாதிக்கின்றார்கள். அவசரத்தில் வார்த்தைகளை அள்ளி எறிந்து கொண்டு ஓடும் இவர்களுக்கு பிரச்சினைகளை ஆழமாக நோக்கும் பொறுமை இல்லை என்பது தெரியவருகின்றது.

அடுத்ததாக இவர்கள் ''மக்கள் சக்தியை அணிதிரட்டும் ஆன்மபலத்தை இழக்கும் போது'' என்பதைக் கவனிப்போம். மக்கள் சக்தியை போராட்ட வடிவங்களில் ஆன்ம சக்தி அணிதிரட்டுகிறது என்பது இவர்கள் விவாதம் உண்மையில் போராட்ட வடிவங்கள் மக்களை அணி திரட்டுகின்றது என்பது அசல் புரட்டல் வாதமாகும். போராட்ட வடிவங்கள் மக்களால் அவர்களது போராட்டங்களின் போது குறிப்பிட்ட சூழல் தேவை என்பவற்றிற்கேற்ப உருவாக்கப் படுவது தமது போராட்டத்திற்குரிய முரண்பாட்டின் தன்மையைப் பொறுத்து இந்த வடிவங்களை மாற்றிக் கொள்வார்கள்.

ஆனால் போராட்ட வடிவம் ஒன்றிற்காகவே மக்கள் அணிதிரளுவதில்லை. இது மார்க்சியத்துக்கு முரணாகும். இவர்களது விவாதத்தின் போக்கு துப்பாக்கி தூக்கினால் தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களை அணிதிரட்டலாம் என்ற நிலை வரும் போது ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகிறது என்று கூறுகின்றது. அதாவது மக்கள் தமது பிரச்சினைகளுக்காக போராட ஒன்று சேருகிறார்கள் என்றில்லாமல் ஆயுதம் ஏந்துவதற்காக ஒன்று சேருகிறார்கள் என்கிறது. எனவே ஆயுதம் ஏந்துவது மக்களை ஒன்றிணைக்க என்றால், மக்களை ஒன்றிணைக்க முடியாது போயின் இந்த ஆயுதங்கள் மக்களுக்கெதிராகத் திருப்பப் பட முடியாது என்று சொல்ல அவர்களிடம் எந்த நியாயமும் இல்லா. ததால் திரும்பவும் இவர்கள் தமது குழம்பல் நிலை காரணமாக, தமது கருத்தை தாமே உடைக்கிறார்கள். அதாவது இது, இவர்களது அர்த்தத்தில் பயங்கரவாதமே என்று விளக்குகிறார்கள் இவர்கள், கோட்டில் தனது எதிராளியின் வழக்கறிஞருக்கு சாதகமாக பேசுகிற வழக்கறிஞராகி விடுகிறார்கள். உண்மையில் ஆயுத மேந்திய கவர்ச்சியில் மக்களை அணிதிரட்ட முடியும் என்பது வெறும் கற்பனாவாதமாகும். இது அடிப்படையில் அராஜகத் தன்மை வாய்ந்தது. மக்களை, விடுதலையை நோக்கமாகக் கொண்டு ஒன்றிணைப்பதை விடுத்து, போராட்ட வடிவத்தை நோக்கமாகக் கொண்டு ஒன்றிணைப்பதென்பது நடைமுறையில் சாத்தியமில்லாததாகும். ஏனென்றால், அராஜக வாதத்திற்கு மக்கள் மத்தியில் நீண்ட கால செல்வாக்கு இருந்ததாக வரலாறே இல்லை.

ஆக விவாதங்களை தர்க்க ரீதியாக முன் வைக்க முதலில் சமூகம் பற்றிய சரியான கண்ணோட்டம் முக்கியம். அது தவறாக இருக்கும் போது, விளைவுகள் எல்லாமே தவறு உடையதாகவே இருக்கும். இவர்களே சொன்ன லெனின் Concrete analysis on Concrete Conditions' என்பதை இவர்களே மறந்து விட்டது தான் மிகவும் கேலிக்குரிய விடயமாகும்.

மேலேசெல்வோம்!

அவர்கள் எழுதுகிறார்கள் ''சிறீலங்கா ஆளும் வர்க்கத்தின் பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக, தமிழ் தேசிய இயக்கமானது சமாதான ஜனநாயக வழி தழுவிய போராட்டங்களைக் கையாண்டது. அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அமைதி வழியில் வெளிப்பாடு கண்ட வெகுஜன எழுச்சிப் போராட்டங்கள் அனைத்தும், சிங்கள ஆயுதப் படைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டன. அறநெறி அரசியல்பண்புகளுக்கு மதிப்பளிக்காத அரசபயங்கரவாதத்தை அன்பு மார்க்கங்களின் ஆன்மீக பலத்தால் எதிர்கொள்ள முடியா தென்பதை தமிழ்மக்கள் உணர்ந்து கொண்டனர். தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து செல்ல காந்தீயப் பாதை நடைமுறைச் சாத்திய மற்றது என்பதனை புரட்சி உணர்வு பெற்ற இளைஞர் சமுதாயம் உணர்ந்து கொண்டது. பிற்போக்கு வன்முறைக்கு எதிராக மென்முறைப் பாதை பயனளிக்காது என்பதை உணர்ந்து கொண்ட புதிய பரம்பரை புரட்சிகர வன்முறை அரசியலை நாடியது'. (பக்-6,7)

ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் ஆயுதப் போராட்டத் தோற்றம் பற்றிய மேற் கண்ட சுருக்கமான வரலாறு மேலோட்டமாகப் பார்த்தால் சரி போன்று தோன்றும். ஆனால் இது அடிப்படையில் வரலாற்று ரீதியாக அப்போது நடைபெற்ற மாற்றங்களை ஸ்தூலமான பரிசீலனைக்கு உட்படுத்தி எழுதப் படவில்லை. அதைக் கவனிக்க முதலில் இவர்கள்! திரும்பவும் ஜனநாயக சமாதான வழிகள் என்று சொல்வதையும் அறவழிப் போராட்ட நெறிகள் என்பதையும் சற்றுக் கவனிப்போம். உண்மையில் இவர்கள் ஜனநாயகம் என்று கருதுவது முதலாளித்துவ ஜனநாயகத்தையே மக்கள் ஜனநாயகத்தை அல்ல என்பது இப்போது மிகவும் தெளிவாகிறது. அதனால் தான், இவர்களுக்கு, அகிம்சைப் போராட்டமே அறவழிப் போராட்டமாகத் தெரிகிறது. இதனை அறவழிப் போராட்டம் என்றால், மறைமுகமாக, ஆயுதப் போராட்டம் அறப் போராட்டம் அல்ல என்கிறார்கள். அறவழிப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்ததால் மறவழிப் போராட்டமான ஆயுதப் போராட்டத்தை தொடங்கியதாக இவர்கள் சொல்லவருகிறார்கள். ஆனால் உண்மை என்ன? போராட்டத்தின் தன்மை ஒரு போதும் அறத்தையும் மறத்தையும் தீர்மானிப்பதில்லை. அது யாரால் நடத்தப்படுகிறது என்பதே அதைத் தீர்மானிக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாதது வெறும் சாதாரணமான விடயமல்ல. இது இவர்களது வர்க்கப் பார்வையையே காட்டுகிறது. முதலாளிய ஜனநாயகமே ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என இவர்கள் கருதுவதும், ஆயுதப் போராட்டத்தை ஜனநாயகப் போராட்டமல்ல என இவர்கள் கருதுவதையும் தெளிவாகக் காட்டுகின்றது. எனவே, இவர்களது விவாதங்கள் இதன் காரணமாக, இவர்கள் என்னதான் மார்க்சிச, லெனினிசம் பற்றிப் பேசினாலும், முழுமையற்றவையாக, முரண்பாடுடையவையாக விளங்குகின்றன.

இனி விடையத்துக்கு வருவோம். இந்த வரலாற்றில், என்னவோ அப்போதைய தேசிய எழுச்சி இயக்கங்களின் பின்னால் மக்கள் பலமான அமைப்பாக திரண்டு இருந்தது போலவும் அகிம்சை நெறி தோல்வியடைந்ததால் ஆயுதப் போராட்டத்தில் குதித்தது போலவும் ஒரு பொய்யான வரலாறு பூசி மொழுகப்பட்டுள்ளது. மேலும், இந்த அகிம்சை நெறி தோல்வி யடைந்ததற்கான காரணமாக, இவர்கள் அறநெறி அரசியல் பண்புகளுக்கு மதிப்பளிக்காத அரச பயங்கரவாதத்தைக் குறிப்பிடுகிறார்கள். உண்மையில் இவர்கள் பிரச்சனைகளை ஆழமாக ஆராய்ந்துள்ளார்களா? இல்லை. எதிரி மதிப்பளிக்காததால் போராட்ட வடிவம் மாறிய தென்பது இவர்களது விவாதம், இது அடியை விட்டு நுனியைத் தேடும் முயற்சி. எதிரிமதிப்பளிக்காமல் போன காரணத்தை இவர்களால் சரிவர விளங்கிக் கொள்ள முடியாததே இதற்குக் காரணம். உண்மையில் அகிம்சை நெறியிலான போராட்டங்கள், இந்த அமைப்புக்குள்ளேயே, பிரச்சினையை தீர்த்து வைத்ததாக இருக்கும் போது எழுகின்ற நேசமுரண்பாடுகளுக்குச் சாத்தியமானவையாகும். ஆனால் தேசிய ஒடுக்குமுறை வடிவங்கள் எதிரி முரண்பாடுடையவை. இதனால் காந்திய நெறிப் போராட்டங்களால் அவற்றை எதிர்த்து நிற்க முடியவில்லை. எதிரி முரண்பாடு கூர்மையடைந்திருக்கையில், எதிரியிடம் போராட்டம் மீதான மதிப்பை எதிர்பார்ப்பது மார்க்சியச் சிந்தனை அல்ல. அது பிற்போக்குச் சிந்தனையே ஆகும். ஆனால், இதை இங்குள்ள நிலைமைகளுக்குப் பொருத்திப் பார்ப்பது எப்படிப் பொருந்தும். இங்கிருந்த முதலாளியத் தலைமைகள், மக்களின் உணர்வுகளில் தமது சுக போக அரசை நடத்தி வந்ததனால், அவை எந்தவிதமான மக்கள் அமைப்பைக் கட்டும் வேலைகளிலும் ஈடுபட்டதில்லை. இங்கிருந்த தலைமை ஒரு சமரசத்தலைமையாக இருந்தபடியால் அது பிரச்சினையின் கூர்மை பற்றி அக்கறை படாது மக்களை அமைப்பாக்காது நிராதரவாக வைத்திருந்ததுடன் தமது சமரச அரசியலைத் தொடர்ந்து நடத்தி வந்தது. தலைமையானது மக்கள் போராட்டத்தின் முன்னணியில் இருக்காமல் மக்களது உணர்வின்—அதாவது அவர்கள் மீதுள்ள பிரச்சினைகள் காரணமாக, அவர்களுக்கு இயல்பாக இருந்த வெறுப்புணர்வை இவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆயினும் முரண்பாடு மேலும் மேலும் கூர்மையுறவே மக்களிடையே தன்னெழுச்சியான போக்குகள் ஆரம்பமாயின. அமைப்பாக்கப்படாத! சரியாக வழிகாட்டப்படாத! பொய்யான சமரசத் தலைமையின் கீழ் இருக்கும் மக்கள் தன்னியல்பாகக் கிளர்ந்தெழுவது தவிர்க்க முடியாததே. அரசியற் தலைமையானது அமைதி முறையைப் போதித்துக் கொண்டிருக்கையில் தன்னெழுச்சியாக கிளர்ந்து எழும் மக்களிடையே இருக்கும் இளம் சக்திகள், அரசியலையோ, அமைதி முறையையோ வெறுத்து நேரடி நடவடிக்கை என்று கூறிக்கொண்டு ஆயுதம் ஏந்தியது தான் நடைபெற்றது. இந்நிலை சரியான அரசியல் நெறியின் வழிகாட்டலோ, ஏற்கனவே அரசியல் அமைப்பாக இயங்கிய தன்மையோ இல்லாத காரணத்தால் குறிக்கோளற்ற வெறும் பிரயத்தனமாகவே இருந்தது. இதன் காரணமாகவே ஆரம்பத்தில் மக்களை அமைப்பாக்கும் செயலைவிட ஆத்திரத்தைத் தீர்க்கின்ற உதிரி நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

எனவே இதிலிருந்து ஆயுதப் போராட்டம் ஆரம்பமாயிற்று எனப் பொய்யான வரலாற்றைக் கூறுவது அபத்தமானது எனத் தெரிகிறது. ஆனால் இந்த உதிரி நடவடிக்கைகள் தவிர்க்க முடியாததே. இவை சரியான பாதையில் செல்லவில்லை என்ற குறைபாட்டைக் கொண்டிருந்த போதும் இவை புரிந்து கொள்ளக் கூடியவை; நீதி வழிப் பட்டமை என்பதில் ஐயமில்லை.

ஆனால் ஆயுதப் போராட்டமாக இது, வளர்ச்சியடையவில்லை. அப்போது ஆயுதப் போராட்டமாக வளர்ச்சியடைய மக்கள் அமைப்பாகக் கட்டப் பட்டிருக்கவில்லை. பின்னர் இந்த இளைஞர்கள் ஒன்றுகி, ஒரு இயக்கமான போதும் கூட தம்மையொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் இயக்கமாக வளர்த்துக் கொள்வதை விட திடீர் நடவடிக்கைகளில் ஈடுபடும் கொரில்லாக் குழுக்களாக மாற்றுவதிலேயே முயற்சி மேற்கொண்டனர்

இந்த வரலாற்றுண்மை பற்றி இவர்கள் குறிப்பிடவில்லை. கடந்த காலத்தின் பாதையை, எமது வரலாற்றை சரியான முறையில் விமர்சனம் செய்வதன் மூலமே எம்மால் எதிர் காலத்தில் சரியாக நடைபோட முடியும் என்பதை விளங்கிக் கொள்ளாதவர்களாக, உணர்வூட்டும் சொற்களால், வரலாற்றின் உண்மையைக் காண மறந்து ஒரு உற்சாகத் தொனியில் எழுதிச் செல்கிறார்கள். இன்னும் அவர் சொல்கிறார் "இன ஒடுக்கு முறையால் எழுந்த சமூக, அரசியல், பொருளாதாரப் புறநிலை, தமிழ்த் தேசியவாத எழுச்சியை ஈழத்தமிழரிடையே வலுப்பெறச் செய்தன. ஆரம்பத்தில் அதே தேசிய வாதத்தால், தேச அபிமானத்தால் உந்தப்பட்டு ஆயுதப் போராட்டத்தில் குதித்த நாம், காலப் போக்கில் ஒரு புரட்சிகர சித்தாந்தத்தையும் அதனால் நெறிப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டம், செயல் திட்டம் என்பவற்றின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்து கொண்டு ஒரு விடுதலை இயக்கத்தை கட்டுக்கோப்பாக அமைத்து ஒரு புரட்சிகர கொள்கைத் திட்டத்தை நெறிப்படுத்துவதற்கு நாம் வரிந்துள்ள ஆயுதப் போராட்டத்தின் வடிவங்களுக்கு வலுவேற்றி தேசிய விடுதலையுடன், சோசலிசப் புரட்சியையும் முன்னெடுத்துச் செல்லவும். மார்க்சிய, லெனினியத் தத்துவத்தை இன்றியமையாததாக ஏற்றுக் கொண்டோம். இந்த அரசியல் விழிப் புணர்வால் நாம் புரட்சிகர சோசலிசத்தை எமது புரட்சித் சித்தாந்தமாக வரித்துக் கொண்டோம். (பக். 10, 11.)

நல்லது; சோசலிசத் தத்துவத்தை தமது புரட்சிகரத் தத்துவமாக வகுத்துக் கொண்டது சரி. ஆனால் ஏன்? இங்குதான் இவர்கள் வேஷம் அம்பலமாகிறது. சோசலிச சமுதாய அமைப்பை விரும்பி முதலாளிய அமைப்புக்குள் மக்களது சுதந்திர வாழ்க்கை சாத்தியமில்லை என்பதால் சோசலிச சமுதாயத்தை விரும்பியதாக இவர்கள் கூறியதில்லை. மாறாக அவர்களது ஆயுதப் போராட்ட வடிவங்களுக்கு வலுவேற்ற மார்சிய, லெனிசிய தத்துவங்கள் தேவையாக இருந்ததால், அத்தத்துவம் சோசலிசம் பற்றிச் சொல்வதால், சோசலிச சித்தாந்தத்தை வரிந்து கொண்டதாக இவர்கள் கூறுகின்றனர். தேசிய விடுதலையின் பின் பெறப்போகும் தமிழீழம் சகல மக்களது சுதந்திர வாழ்க்கைக்கும் உத்தரவாதம் செய்யும் ஒரு நாடாக இருக்க வேண்டும் என்ற அக்கறை இவர்களுக்கு இல்லை என்பது இதனால் தெளிவாகிறது. ஆயுதப் போராட்டத்தை எத்தத்துவம் ஆதரித்தாலும், இவர்கள் அதில் சேர்ந்து கொள்ளத் தயாராக இருப்பார்கள் என்று இதிலிருந்து தெளிவாகிறது. தத்துவம், இவர்கள் சமூக ரீதியான ஆய்வால் இவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்காக விரும்பப்படவில்லை. மாறாக தமது நடவடிக்கைகளுக்கு முலாம் பூசவே தேவைப் படுகிறது. பாசிசம்கூட ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கிறது. ஆனால், அதனால் போராட்டத்துக்கு முலாம் பூசமுடியாதென்பதைத் தவிர வேறெந்தக் காரணங்களாலுமல்ல. இவர்கள் அதைப் பற்றிச் சொல்லவில்லை என்று தோன்றுகிறது. பின்னால் சோசலிச சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதால் பூரண சுதந்திரம் பெறமுடியும் என்று இவர்கள் ,கூறுவாராயினும் அதற்காக இவர்கள் சோசலிசத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக கூறவில்லை. அதாவது ஆயுதப் போராட்டம் என வரித்துக் கொண்ட முடிவுக்கு உகந்த தத்துவமான மார்க்சிய லெனினிய தத்துவத்தை தேர்ந்தெடுத்து விட்டு இனி அதைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் சுபிட்சமாக வாழமுடியும் என அதுபற்றி விளக்கமளிக்கிறார்கள். அதாவது இவர்கள் எப்பொழுதுமே, தமது முடிவுகளுக்காக சமுதாயத்தை, மக்களை அழைக்கிறார்களே ஒழிய மக்களின் தேவைகளுக்காக முடிவுகளை ஏற்படுத்திக் கொள்வதல்ல என்பது இவர்களின் செயலென்கிறது. இது மார்க்சிசம் அல்ல. மார்க்சியம் மக்களிடம் இருந்து கற்றுக் கொள்ளவும், மக்களோடு மக்களாக நின்று பிரச்சினைகளை எதிர்நோக்கவும் சொல்கிறதே அன்றி மக்களை முடிவுகளுக்கு ஆதரவாக காட்டுவதல்ல. இதைத்தான் பழைய தேசத் தலைவர்களும் செய்தார்கள். அதாவது மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்தி தமது முடிவுகளுக்கு சாதகமாக அவர்களை அணி திரட்ட முயன்றார்கள். முடிவு என்ன வாயிற்று. என்பது வரலாறு எமக்களித்துள்ள நல்லதொரு போதனையாகும்.

தொடர்ச்சி 27ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரவணக்கம் செலுத்தி நிற்போம்

## டாக்டர் இராசசுந்தரம்

மலையக மக்களின் மறுவாழ்வுக்கு வித் திட்ட தியாகச்சுடர் திரு டாக்டர் இராச சுந்தரம் அவர்கள் உதவி வைத்தியராக மலையகப் பகுதியில் பணியாற்றியதுடன், அப்பகுதி மக்களிடையே பணியாற்றிய வைத்தியர் சாந்தியை காதல் திருமணம் செய்ததுடன் இருவரும் ஒன்றிணைந்து அப் பகுதி மக்களிற்கு அயராது சேவையாற்றி அம்மக்களின் பிரச்சனைகள், தேவைகள், அரசியல், சமூக, பொருளாதார ஏற்றதாழ்வு களை கற்றுக் கொண்டதுடன் இவற்றிலிருந்து அம்மக்களை விடுவிப்பதாயின், இவையாவற் றையும் களைந்தெறிந்து, அரசியல், சமூக, பொருளாதார, விடுதலை பெற்ற அரசு தேவை என்பதை உணர்ந்து அதன்வழி செய லாற்றிய சிறந்த பொதுவுடமைக் கொள்கை யுடைவராவார்.

பின்பு அவரும் அவரது துணைவியும் வவுனியாவிற்கு வந்து அப்பகுதி மக்களுடன் அன்னியோன்யமாக பழகினர். 1977இல் மலையக மக்கள் இனவெறி அரசால் அடித்து விரட்டப்பட்டு நிர்க்கதிக்குள்ளாக்கப் பட்ட போது அவர்களை ஈழத்தின் பகுதிகளான வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் குடிய மர்த்தி அவர்கட்கு புனர்வாழ்வு அளித்த துடன், அவர்களின் நல்வாழ்விற்கென்றே, காந்திய இயக்கத்தின் மூலம் தன்னை அர் பணித்து அதன் செயலாளராக இருந்து சேவையாற்றினர்.

மலையக மக்களிற்கு மறுவாழ்வு அளிப்போம், ஈழத்தின் பகுதிகளில் குடியமர்த்துவோம், தமிழ் மண் காப்போம் என்றெல்லாம் பிற் போக்கு தலைமைகள் பிதற்றிய போதும், தேர்தல் கோசங்களாகவே பார்த்தனவேயன்றி எந்தவொரு உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எனவே காந்தீயம் மக்கள் மத்தியில் எந்தவொரு, அரசியற் கட்சியும் பெருத செல்வாக்கை பெற்றுக் கொண்டது. இதன் மூலம் அம்மக்கள் தமது வாழ்வை ஆரம்பிப்பதற்குரிய மறுவாழ்வுத் திட்டங்களை வகுத்து அவர்கட்கு தேவையான கல்வி, உணவு வசதிகள், முக்கியமாக அவர்கட்கு சொந்தமாக நிலத்துண்டுகள் கிடைக்கக்கூடிய வகையில் தனது உழைப்பை நல்கினர்.

தமிழ் பிரதேசங்களில் மலையக மக்களை குடியமர்த்துவதை நோக்கி கொதிப்புற்று அதனை சிதைப்பதற்கு சிறீலங்கா அரசு எதிர்பார்த்திருந்தது. மற்றும் எம்மிடையே காணப்படும் தலை மறைவான இயக்கங்கள் தமது தொடர்புகளை சரியான முறையில் கையாளாமையாலும், அவற்றின் தவருன நடவடிக்கைகளும் காந்தீயம் சிதைக்கப் படுவதற்கு சிறீலங்கா அரசுக்கு களம் அமைத் துக் கொடுத்ததெனலாம். இதனுல் அடக்கு முறை அரசின் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட துடன் சகல விடுதலைப் போராளிகளைப் போலவே இவரும் வதைகளைப் பெற்றுர்.

1983 யூலை, மனிதாபிமானமற்ற முறை யில் வெலிகடை வதைக்கூடத்தில் பாசிச அடக்கு முறையின் கொடிய கரங்களால் தியாக தீபம் அணைக்கப்பட்டது.

எனினும் அவரது ஒளிக்கீற்றுகள் ஈழத் தின் பகுதிகளில் எங்கெல்லாம் தனது பணியை செய்தாரோ அங்கெல்லாம், ஏன் அனைத்து தமிழ் மக்கள் நெஞ்சங்களிலும் அணையாது வீசிக் கொண்டேயிருக்கும்.

## தோழர் தங்கத்துரை

இவர் 1970ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினராவார்: தமிழ் மாணவர் பேரவை யின் சிதைவினை தொடர்ந்து, பல இளைஞர் கள் கைது செய்யப்பட்டதுடன் தேடப்பட்ட தாலும், தலைமறைவான முறையில் இயங்க ஆரம்பித்தனர். 1973 வரை தனியான குழு வாகவே செயற்பட்டு வந்தனர். இதுவே காலப் போக்கில் தமிழீழ விடுதலை இயக்கமாக உரு வெடுத்தது.

இவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்ததுடன், எல்லோரிடமும் இனிமையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழகும் தன்மையும், தியாக உணர்வும், செயல் திறனும் மிக்க ஒருவராவார். இவர் ஏனைய இயக்கங்களையும் தோழமை இயக்கங்களாகவே கருதியதுடன் அவற்றிடையேயான நட்பையும் வலியுறுத்தி வந்தார். ஏனைய இயக்க உறுப்பினர்களுடன் தோழனகவே பழகியும் வந்தார். இவர் பல இயக்கத் தோழர்களாலும் தங்கண்ணு என செல்லமாக அழைக்கப்பட்டார்.

இவரது கடந்த கால நடவடிக்கைகள் தாக்குதல் பற்றி உடன்பாடு இல்லாத எமக்கு போதும் இவரது உறுதியான போக்கையும், தியாக உணர்வையும் மெச்சுகிறேம். இவரது சில நடவடிக்கைகளால் அரசால் தேடப்பட்ட போது இந்தியாவிற்கு தப்பிவர முயற்சித்த போது 5-9-81 இல் கைது செய்யப்பட்டதுடன், யூலை வெலிகடை படுகொலை சம்பவத்தின் போது இவரது உயிர் சிறீலங்கா அரசின் காடையர் கூட்டத்தால் வலிந்து பறிக்கப்பட்டது. இவரது அண்மைகால நீதிமன்றஉரையானது இவரது கடந்தகால போக்குகளிலிருந்து வேறுபட்டதுடன் வரலாற்று முக்கியதுவம் வாய்ந்த ஓர் உரையாகும்.

## தோழர் குட்டிமணி

1984 யூலை கலவரத்தின் போது நடைபெற்ற வதைக்கூடமான வெலிகடையில் மிகவும் கோர மான முறையில், அணு அணுவாக சித்திரவதைக் குள்ளாகப்பட்டு காடையர் கூட்டத்தால், அரசின் திட்டமிடல்படியே இவரது உயிர் பறித்தெடுக்கப் பட்டது.

இவர் 1971 இல் இருந்தே பொலிசாரால் தேடப்பட்டு வந்ததுடன் 1973இல் இந்தியாவில் கைது செய்யப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் மீண்டும் விடுதலையாகி மீண்டும் கைது செய்யப்பட்டு விடுதலையாக்கப்பட்டதுடன், தொடர்ந்தும் இவரது இராணுவ நடவடிக்கைகளால் தேடப்பட்டதுடன் 81 இல் இந்தியாவிற்கு தப்பிவர முயன்றபோது கைதுசெய்யப்பட்டார். இவர் இராணுவ நடவடிக்கைகளில் மிகவும் திறமையாகவே செயற்பட்டுவந்தார். இவரது இந்த இராணுவக் கண்ணேட்டத்துடன் எமக்கு உடன்பாட்டில்லையாயினும் இவரது விடுதலைக்கான வீரம் செறிந்த தியாக உணர்வையும் திறனையும் நாம் மதிக்கின்றேம்.

இவர் மாற்று இயக்கத்துடனும் நட்பை பேணுவதில் அக்கறையாக இருந்து செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தோழர். இராஜேந்திரம்(றெபேர்ட்)

தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 14. 05. 1950 ல் பிறந்தார். இவர் கல்வி பயிலும் காலத்திலேயே நற்பண்புடையவராகவும் தியாக சிந்தையுடையவருமாக விழங்கினர். பின்னர் இ. போ. ச திருத்துனராக (Meganic) கடமையாற்றியதுடன் 1980 வேலை நிறுத்த போராட்டத்தின் போது தனது பதவியை இழந்தார். இவர் வெகுஜனப் போராட்டங்களில் அக்கறை கொண்டவரும் அதற்கான பாதையில் செயற்பட்டு வந்தவருமாவார், இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினராவார். ஆனைக் கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதலில் முதலாவது எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவரும் வெலிகடையில் 54 போராளிகளுடன் படுகொலை செய்யப்பட்டார்.

இவர் மற்றய இயக்கங்களுடன் நட்பை பேணுவதுடன், ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டி வந்தார். இவர்களது கட்டுப்பாடற்ற ராணுவநடவடிக்கைகளுடன் எமக்கு உடன்பாடில்லையாயினும் இவரது பங்களிப்பையும், தியாகத்தையும் மதிக்கின்றேம்

## தோழர் செல்லக்கிளி (செல்வநாயகம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 1975 இலிருந்து இணைந்து வேலை செய்த இவர் பல ராணுவநடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். பல தாக்குதல்களில் இவர் திறமையாக செயற்பாட்டார்.

இவர் 23. 08. 83திருநெல்வேலி13 இராணுவத்தினர் தாக்குதலின் போது களத்தில் வீரமரணம் எய்தினர்.

எமக்கு இவர்களது சுத்த இராணுவக் கண்ணேட்டத்துடன் உடன்பாடில்லை. எனினும்

www.tamilarangam.net

இவரது அபார ராணுவத் திறமை சகல விடுதலைப் போராளிகளாலும் போற்றப்பட வேண்டிய ஒன்று. இவரது துணிவையும் தியாகத்தையும்மதிக்கின்றோம்.

## தோழர் விமலதாசன்

'மனிதன்' பத்திரிகை ஆசிரியர் விமல தாசன் 1983 யூலை 24 ந்திகதி சிறீலங்கா இன வெறி இராணுவத்தினுல் சுட்டுக் கொல்லப் பட்டார். யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான இவர் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போது 'மனிதன்' பத்திரிகை ஆசிரியராக இருந்தார். பின் இனங்களுக் கிடையிலான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின்(MIRJE) முன்னேடியாக இருந்து செயற்பட்ட இவர், இயக்கங்களையும், தனி நபர்களையும் ஐக்கியப் படுத்தி வெகுஜனப் போராட்டங்களை நடத்துவதில் அக்கறையாக இருந்தார். இயக்கங்களிடையே நட்புறவை ஏற்படுத்தப் பாடுபட்டார். சகல போராளி களுடனும் அன்பாகவும், இனிமையாகவும் பழகும் இவரை போராளிகள் என்றும் மறக்க மாட்டார்கள். தன்னலமற்று, தமிழீழ விடுதலைக்காகத் தன்னுயிரை அர்ப்பணித்த நண்பர் விமலதாசனிற்கு எமது அஞ்சலிகள்.

*

26ஆம் பக்கத் தொடர்ச்சி

இதன் மூலம் இவர்கள் தொடர்ந்தும் மக்களை அமைப்பாக்காது பார்வையாளர் களாக வைத்திருக்கும் நிலைக்கே செல்கிறார்கள். மக்கள் போராட்டம் மக்களால் நடத்தப் படுவது; ஒரு சிலரால் அவர்களுக்காக அல்ல. இதை இவர்கள் புரிந்து கொள்ளாதது இவர் களது மார்க்சிய அறிவை வெளிக்காட்டுகிறது. பாருங்கள் இன்னும் தொடர்கிறார்கள் "நாம் தேர்ந்துள்ள கெரில்லாப் போர் முறைத் திட்ட மானது, ஒரு வெகுஜனப் போராட்ட வடிவம் என்பதை, சோசலிசத் தத்துவம் ஏற்றுக் கொள்கிறது." (பக்: 12 :13) இதிலிருந்து என்ன தெளிவாகிறது எமது போராட்டத்தை சோசலிசம் ஆதரிக்கிற தென்பதை திரும்பத் திரும்பச் சொல்லி எதை மெய்ப்பிக்கப் பார்க் கிறார்கள். கெரில்லாப் போராட்ட வடிவம் ஒரு வெகுஜனப் போராட்ட வடிவமாக ஏற்றுக் கொள்வதாக, மார்க்ஸ் சொன்ன சமூக நிலைமைகள் பற்றி எதுவும் கூறாமல், சும்மா சொல்லிவிடுகிறார்கள். மக்கள் எதிர்ப் புணர் வை கெரில்லாப் முறையில் காட்டுதலை வர வேற்பது. அதையொரு வெகுஜனப் போராட் டமாக அங்கீகரித்தலாகாது. எதிர்ப்புணர்வு அடக்குமுறைக் கெதிராக நடத்தப்படும் போது எந்த ஒரு தார்மீக எண்ணம் கொண்ட வனும் ஆதரிப்பான். இது சாதாரணம். ஆனுல் கெரில்லாப் போராட்ட வடிவமே போராட் டத்தின் முழுமை என்பதை ஒரு போதும் எந்த மார்க்சிஸ்டும் சொன்னதில்லை. கெரில் லா நடவடிக்கைகள் மக்கள் போராட்டத்தில் ஒருநடை முறைத் தந்திரமாகவே அனுட்டிக் கப்படும். அதுவே மக்கள் போராட்டமாகி விடாது. ஆனுல் இவர்களோ மார்க்சையும், லெனினையும், மாவோவையும், சேகுவரா வையும், இன்னும் சிலரையும் எந்தவிதமான வித்தியாசத்தையும் அவர்களின் தத்துவங் களிடையே காணதவராக மேற்கோள் காட்டு கின்றார் 'கெரில்லாப் போட்டம்பற்றி லெனின் சொல்வதை நாம் பார்ப்போம். அவர் சொல் கிறார்" கெரில்லா முறையானது வர்க்க உணர் வுள்ள பாட்டாளிகளை இழிவான குடிகார நாடோடிகளாக மாற்றக் கூடியது என்று பார்த்தோம். அது உண்மை. ஆனுல் இது பாட்டாளிவர்க்கக் கட்சியானது கொரில்லால் முறையை தனது ஒரே போராட்ட முறை யாகவோ அல்லது அதன் பிரதான முறை யாகவோ கருதமுடியாது என்று மட்டுமே பொருள்படும். அதாவது இது மற்ற போராட்ட வடிவங்களுக்குத் துணையாகவும், அவற்றுடன் வைத்தெண்ணப்பட வேண்டிய தாயும், சோசலிச அமைப்பின் ஒளியூட்டலில் உயர்த்தப் படவேண்டியதாயும் பொருள் படும்" இதுதான் லெனின் சொன்னது.

இதை வெறுமே சுருக்கமாகச் சொல்லி லெனின் சொல்வதாகச் சொல்வது சுத்த அபத்தம். கெரில்லா முறை எமது நாட்டுச் சூழலில் அவசியமானது. ஆனுல் அது ஒரு அமைப்பாக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் நடவடிக்கையாக இருக்கவேண்டுமே யொழிய, ஒரு கெரில்லாக் குழுவின் நடவடிக்கையாக அல்ல. அப்படிப்பட்ட நடவடிக்கையை அவர் ஒரு போதும் ஆதரித்ததில்லை. அமைப்பாக்கப் படாத கெரில்லா யுத்தம் தவறுகச் சொல்லக் கூடியது. அவர் அன்றே எச்சரிக்கை செய் துள்ளார். கெரில்லா நடவடிக்கையை மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கம் மேற்கொள்வதற்கும், ஒருகெரில்லாக் குழு தனக்காக மக்களைக்கட்ட முனைவதும், அதை வெகு ஜனப்போராட்டம் என்பதற்கும் அடிப்படை வித்தியாசம். முதலாவது மக்கள் போராட்டம், இரண்டாவது அராஜகம் என்பதே. அடிப்படையில் மக்கள் போராட்டத்தையோ, கெரில்லாப் போர்முறையையோ விளங்கிக் கொள்ளாததாலேயே கெரில்லாப் போராட்டத்தை வெகுஜனப்போராட்டம் என்று சொல்ல இவர்களால் முடிகிறது. நோக்கம் என்னதான் தூய்மையானதாகவும், நல்லதாகவும் இருந்தபோதும் கெரில்லா நடைமுறை மக்கள் அமைப்பை கட்டியெழுப்புவதை பாதிக்கத்தான் செய்கிறது என்பதை மறுக்கமுடியாது. மக்கள் அமைப்பு வேலையை அது சீர்குலைக்கிறது என்பதால் இந் நடவடிக்கையை நிராகரிக்கின்றதாக அர்த்தம் இல்லை. மக்கள் அமைப்பைக் கட்டமுதலே இந் நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பது போராட்டப் பாதை பற்றிய தெளிவின்மையையே காட்டுகின்றது. இது விடுதலைப் போராட்டத்துக்கு உகந்ததல்ல. மாறாக குந்தகமானது. இதைத்தான் லெனின் அடிக்கடி தனது "Gruerrilla war fire" என்ற கட்டுரையில். வலியுறுத்துகிறார். கெரில்லாக் குழுக்களின் நடவடிக்கைகள், அதாவது அமைப்பற்றகுழு நடவடிக்கைகள், தன்னெழுச்சியான கிளர்ச்சியை தூண்ட முடியுமே ஒழிய அதைக் கட்டுப் படுத்த முடியாதென்பதையே தெளிவாக லெனின் விளக்கிச் சொல்கிறார். தன்னெழுச்சியான கிளர்ச்சிகள் அடிப்படையில் அராஜகத் தன்மை வாய்ந்தவை. அராஜகம் கூட நல்ல நோக்கம் கருதியே உருவாகுதற்கு வாய்ப்புண்டு. ஆனால் இதில் உள்ள குறைபாடு என்னவென்றால் இதனால் நினைத்தால் கூட அதைக் கட்டுப் படுத்த முடியாது என்பது தான். நாம் விடுதலைப் போராளிகள், சிங்கள இனவெறி அரசை உருக்குலைப்பது மட்டுமல்ல நம்நோக்கம். அதன் பின் ஒரு தனியரசை உருவாக்குவதும் நிர்வகிப்பதுமாகிய பணியும் எமக்கு உண்டு. எனவே தான் நாம் அராஜகத்தை ஆதரிக்க முடியாது. அராஜகத்தால் சிங்கள இனவெறி அரசை ஸ்தம்பிக்கச் செய்ய முடியும். ஆனால், அதனால் ஒரு அரசை அதன் பின் உருவாக்கி மக்களை சுபீட்சமாக வாழவைக்க முடியாது. ஏனென்றால் அராஜகம் போகிற போக்கில் மக்கள் மத்தியில் ஒழுங்கு, கட்டுப்பாடு என்ற எல்லாவற்றையும் அழித்து உருக்குலைத்து விடும்.

மக்கள் போராட்டம் என்று கருதிக் கொண்டு இப்பிரசுரம் செய்வதெல்லாம் அராஜகப் பிரச்சாரமே. இன்னும் பார்ப்போம் இவர்கள் சேகுவராவின் மேற்கோள் ஒன்றைக் கையாண்டிருக்கிறார்கள். அதாவது "கியூபாப் புரட்சி, லத்தீன் அமெரிக்கா, வெகுஜனப் போராட்டம் பற்றிய பழைய சித்தாந்தத்தின் புரட்சிகரமான சிந்தனையைத் தூண்டி விட்டது. கெரில்லாப் போராட்டத்தின் மூலம் ஒரு அடக்குமுறை ஆட்சியில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் மாபெரும் சக்தி மக்களுக்கு உண்டு என்பதை கியூபாப் புரட்சி தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

இந்த மேற்கோளை சேகுவரா சொன்னது சரி. ஏனென்றால் அவரால் இன்றைய கியூபாவை இருந்து பார்க்க முடியவில்லை. ஆனால் இவர்களுக்குமா முடியவில்லை. கியூபா மக்களின்இன்றைய நிலையும், அவர்கள் புரட்சிக்குப்பின் சுயாதிபத்தியத்துடன் வாழ்வதற்குப் பதிலாக, ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் காலனி வாழ்க்கையை நடாத்துவதையும் இவர்கள் அறியவில்லையா? மறந்து கியூபாப் புரட்சிக்கான சூழலையும் எமது சூழலையும் சற்றேனும் யோசித்துப் பாராது இவர்கள் மேற்கோள் காட்டுவதுதான் இவர்களது concrete Analyers, சோ தெரியவில்லை. ஒரு நாட்டில், அந்நாட்டில் இருக்கும் இராணுவத்தில் ஓர் பகுதி; மக்கள் எல்லோருமே நடைமுறையில் உள்ள அரசுக் கெதிராகத் இருக்கும் போது அரசுக் கெதிரான ஒரு குழுவின் கெரில்லாப் போராட்டம் வெற்றி பெறுவது சாத்தியமே இக்காரணமே கியூபாவின் கெரில்லா யுத்தத்திற்கான வெற்றிக்கு காரணமாய் அமைந்தது. அங்கிருந்த இராணுவமும் அரசுக் கெதிராக திரும்பியதும் கெரில்லாத் தாக்குதலை ஆதரித்ததும், இந்த வெற்றிக்கு மிகவும் முக்கியமான காரணங்கள். ஆனால் இலங்கையின் நிலைமை அப்படியல்ல. சிறீலங்கா இராணுவம் சிறீலங்கா அரசுக் கெதிராக திரும்புவதோ, தமிழ் மக்களின் சார்பான கெரில்லாப் போராட்டத்தை ஆதரிப்பதென்பதோ சாத்தியமற்ற தொன்றாகும். எனவே நிட்சயமற்ற வெற்றிக்கான போராட்டமாகவே இவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளாமலே அவரை மேற்கோள் காட்டு கிறார்கள். இதன் மூலம், இவர்களை, மார்க்சிய வாதிகளோ அல்லது இவர்கள் கூறும் வலது குறைந்த இடதுகளோ பயங்கரவாதிகள் என்று சொல்வதற்கு இடமளித்துள்ளார்கள். இவர்களது தவறான கண்ணோட்டமே, சேகுவராவையும் ஒரு மார்க்சிஸ்ட்டாக கருதி மேற்க் கோள் காட்ட வைக்கிறது. சேகுவரா ஒரு புரட்சியாளன் மக்கள் நலன் பேணுபவன், நல்ல ஒரு கொரில்லா வீரன் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை ஆனால் இவர் ஒரு மார்க்சிஸ்ட் அல்ல. மார்க்சிய நெறி தழுவிய போரட்ட முறையல்ல இவரது முறை. மாறாக இவர் ஒரு குட்டிபூர்ஷ்வா தத்துவ வாதி, மார்க்சிசம் பாட்டாளி வர்க்க தத்துவம். எனவே அவனை புரிந்து கொள்ளாமல் இவர்கள் அவனை மேற்க்கோள் காட்டுவது உண்மையில் இவர்கள் வரித்துள்ள தத்துவம் மார்க்சிய லெனினிசமல்ல சேகுவராயிசமே என்பதையே நிருபிக்கின்றன. மக்களை அணிதிரட்டு வதிலும், அமைப்பு வேலைகள் செய்வதிலும் அலுப்பும் சலிப்பும் அடைகின்றனர். நடுத்தர வர்க்க குட்டிமுதலாளிய சிந்தனை வாதிகளின் திருத்தல் வாதத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் சேகுவராயிசம் இவர்களையும் பாதித்துள்ளது. எனவே தான் இவர்கள் மக்களை புரட்சிகர சக்திகளாக நோக்காது தமது போராட்டத்திற்க்கான உதவிக்கருவி களாக நோக்க வைக்கிறது

இவர்கள் மக்கள் போராட்டமே தமது போராட்டம் என நிருபிக்க முன் வைக்கும் விவாதம் தவறானது. இவர்கள் எழுதுகிறார்கள் எமது போராட்டம் ஒரு மக்கள் போராட்டம் நாம் போராடுவது எமது மக்களுக்காக, எமது மக்களின் விடுதலைக்காக, எமது மக்களின் விமோசனத்திற்காக நாம் எவ்வகையிலும் மக்களிடம் இருந்து அன்னியமாக இருக்க வில்லை. நாம் மக்களோடு அங்கமாயிருக்கிறோம் விடுதலை வேட்க்கையின் வெளிப்பாடாய் பிறந்த விடுதலை வேங்கைகள் நாம். ஆத்திர மடைந்த எமது மக்களின் இரத்தக் கொதிப்பே எமது கையில் ஆயுதங்களாக உருவெடுத் துள்ளன. எனவே எமது போராட்டமானது மக்கள் போராட்டமன்றி வேறொன்றுமில்லை...

மூன்றாவது உலக நாடுகளில் வெற்றி யீட்டிய தேசிய விடுதலைப் போராட்டங்கள் அனைத்தும் கொரில்லாப் போர் முனை வடிவம் எடுத்த பின்னர் வெகுசன ஆயுதப் போராட்ட பரிணாமம் பெற்றவை என்பதை இந்த தோழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் (பக் 17, 18)

இவர்களது விவாதத்திலேயே இவர் களுக்கு முரணான கருத்துக்கள் நிலவுகின்றன. மக்களுக்காக நாம் போராடுகிறோம் என்கிறார் களே இவர்கள், அது எந்த மக்களுக்காக? மக்கள் அமைப்பு ஒன்றாக நீங்கள் உங்களை உருவாக்கிக்கொண்டு, அந்தமக்களமைப்பின் போராட்டமாக உங்கள் போராட்டமாக இதை நடாத்துகிறீர்களா? இல்லை இந்தத் தோழர்கள் தாம் செய்யும் நடவடிக்கைகள், மக்களுக்கு சாதகமானவையாக, அதாவது மக்களின் எதிரியான அரசுக்கு எதிரானதாக இருப்பதால் மக்களின் ஆதரவை பெறு கின்றன என்பதாலேயே இதை மக்கள் போராட்டம் என்கின்றனர். இது உண்மை யல்ல. மக்கள் தமது போராட்டத்தை தமது அமைப்பின் கட்டுப்பாட்டில் நடாத்தும் போதுதான் அது மக்கள் போராட்ட மாகிறது. இவர்கள் போல, மக்களின் ஆதரவான ஒரு குழு நடாத்தும் போராட்ட மல்ல, மக்கள் போராட்டமாகிறது மக்களது எதிர்ப்புணர்வு இவர்கள் போராட்டத்தினால், அதாவது அவர்கள் அமைப்பாக்கப்படாத தால், வெறும் திருப்தியுணர்வு அடைகிற தென்பது தான் உண்மை. ஆனால் அதுவே மக்கள் போராட்டம் நடாத்துவதாக அர்த்தப் படுத்தமுடியாது. மக்கள் தமது போராட்டத் தின் போது கொரில்லா நடவடிக்கைகளை மேற் கொள்ளுவார்கள் கொரில்லாக்கள் தமது போராட்டத்தின் போது மக்களின் ஆதரவை பெறுவார்கள் ஆனால் முன்னையது மக்கள் போராட்டம். பின்னையது வெறும் தன்னெழுச் சியான தாக்குதல் அவ்வளவுதான், அதுமக்கள் போராட்டமல்ல. எனவே இவர்கள் தமது நடவடிக்கைகளை ஒரு போதும் மக்கள் போராட்டம் என்று கூறிவிட முடியாது

மூன்றாம் உலக நாடுகளின் தேசிய போராட்ட வெற்றி பற்றி இவர்கள் சொல்வது சரிதான். வெறுப்படைகின்றமக்கள் மத்தியில் இருந்து தன்னெழுச்சியான கொரில்லா தாக்குல் நடாத்துவது வரலாற்று நியதிதான் ஆனால் அதற்க்காக அவையே வெற்றியை பெற்றுத்தந்தன என்பது சரியல்ல.

www.tamilarangam.net

முறை இருக்கிறது. குருட்டு அதிஸ்டத்தில் நம்பிக்கை கொண்ட இந்தப் போராட்டம் வெற்றி பெறுமாயினும், இதனால் வெற்றிக்குப் பின் சுயமாக அதனை உறுதி செய்து கொள்கின்ற விதத்தில், மக்களை சுயமான உழைப்பில் ஈடுபடுத்துகின்ற செயலைச் செய்ய முடியாது. ஏனெனில் இந்தக் கெரில்லா நடவடிக்கைகளுக்குப் பின்னால் மக்கள் உணர்வு ரீதியான ஆதரவு இருக்கிறதே அன்றி அமைப்பு ரீதியான ஒன்றிணைப்பு இல்லை. இதனால் விடுதலைக்குப்பின் மக்களைத் துப்பாக்கி முனையில் வேலை செய்விக்க வேண்டி வரும். இது அடிப்படையில் பாசிசத் தன்மை கொண்டதாகவே மாறும் அல்லது ஒரு ஏகாதிபத்தியத்தின் காலடியில் வீழ்ந்து தன்னை ஒரு காலனியாக்கி ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு வழிவகுக்கும். எனவே மக்களை அணி திரட்டாமல் இப்போராட்டமுறை மிகவும் ஆபத்தானதும் நிராகரிக்க வேண்டியதுமாகும்.

இவர்கள் மேற்கோள் காட்டும் சேகுவராவின் கருத்து மார்க்சியக் கருத்தல்ல. அது மார்க்சியத் திரிபுஆகும். ஆயுதப் போராட்டம் மக்களை ஒருங்கிணைந்து வழிதவறாப் போராட்டத்தில் ஈடுபடுத்துகிறது என்பது தவறானதாகும். ஏனென்றால் இதுமக்களை, இருக்கும் அமைப்பை உடைக்க மட்டுமே பயன்படுத்தக் கூடியது. இதற்குமேல் இதன் நோக்கம் தெளிவற்றது. அராஜகத்தின் தன்மை ஸ்தாபன தன்மையற்ற போராட்டமே.

இருக்கும் கொடுங்கோலமைப்பை உடைக்கின்ற முற்போக்கு அம்சத்தை மட்டும் அது கொண்டிருக்கும் அதன்பின் ஒரு அமைப்பை- அரசை, உருவாக்கும் திறன் அதற்கில்லை. அரசை உருவாக்கும் நோக்கில் போராடுவது தான் போராட்டம். இருக்கிற அமைப்பை உடைப்பதற்காகவே மட்டும் போராடுவது அராஜகமாகும். அதாவது நோக்கம் கருதிய செயலாக் அல்லாது செயலே நோக்கமாக இருக்கையில், போராட்டம் அராஜகத்தன்மை பெறுகிறது. எனவே இத்தகைய மார்க்சிச புரட்டை ஒருபோதும் ஏற்க முடியாது.

இதை இவர்கள் இன்னும் தெளிவாக விளக்குகிறார்கள்; வெகுசன ஆதரவின்றி ஒரு சிலர் மாத்திரம் ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருந்தால் மட்டும் அப்போராட்டமானது தேசிய விடுதலைக்கோ அல்லது சோசலிசப் புரட்சிக்கோ வழிகோலப் போவதில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஆயுதப் போராட்டமானது மக்களை அணிதிரட்டும் சக்தியாக, வெகுஜன ஆயுதக் கிளர்ச்சியாக விரிவடையும் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும், நாம் உணர்ந்து செயற்படுகிறோம். ஆகவே புரட்சிகர வன்முறை தழுவிய எமது போராட்டமானது, வெகுஜன இயக்கத்திற்கு எவ்விதத்திலும் மாறாக இயங்கவில்லை. **ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைப்படுத்தி, வெகுசனத்தை அதற்கு ஆதரவாக அணி திரட்ட வேண்டும் என்பதே விடுதலைப்புலி இயககத்தின் செயற் திட்டமாகும்.** (பக்:14) எனவே இவர்கள் தமது முடிவுகளுக்காக மக்களை அணிதிரட்டுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இந்த அணிதிரட்டல், மக்கள் அணி திரட்டலாக இருக்க முடியாது. ஆயுதம் ஏந்துவதில் ஆர்வமுள்ளவர்களையே அணிதிரட்ட முடியும். அத்துடன் தேசிய விடுதலை என்பது பற்றிய சரியான அரசியற் கோட்பாட்டை இவர்கள் சொல்லவில்லை. ஆனால் ஆயுதப் போராட்டம் பற்றியே இவர்கள் கூறுகிறார்கள். தேசிய இனப்பிரச்சினை, அதன் தன்மை, அதற்கான விடுதலைப்பாதை, அதில் ஆயுதப் போராட்டத்தின் பங்கு பற்றி இவர்களிடம் ஸ்தூலமான ஆய்வு இல்லாததே தவறான கண்ணோட்டத்திற்கு காரணமாகும்.

இவர்கள் மேலும் சொல்கிறார்கள் "எமது இயக்கத்தின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளே இன்றைய சிங்கள இனவாத அரசை ஆட்டம் காணச் செய்திருக்கிறது. சிறீலங்காவின் பொருளாதாரமும் என்றுமில்லாத நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. எமது ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, இன்று தமிழீழத்தில் சிங்கள அரசின் சிவில் நிர்வாக அமைப்பு சீர்குலைந்திருக்கிறது. பொலிசார் மீது நாம் தொடராக நடத்திய தாக்குதல்களால் வடபகுதி இரகசிய பொலிஸ் சேவை நிர்மூலமாக்கப் பட்டிருப்பதுடன், பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டு, பொலிஸ் நிர்வாக சேவையே ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. எமது கெரில்லாப் போராட்டமானது, சிங்கள இராணுவ அமைப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறில்லை. தமிழீழத்தில் சிங்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவம் பதட்ட நிலையடைந்து கட்டுப்பாடு குலைந்து பலவீனமடைந்திருப்பது எமது தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களின் நேரடி விளைவாகும்.''

இது எதனைக் காட்டுகிறது? ஆயுதப் போராட்ட வளர்ச்சியையா? சிறீலங்கா சிவில் நிர்வாக அமைப்பை சீர்குலைப்பது, எந்த விதத்திலும் விடுதலைக்கான நோக்கில், மக்கள் போராட்டத்தை வழி நடத்துகின்ற போக்கில், மக்களை அமைப்பாக்கப்படாத வரை பெருமளவு பயனுள்ளதாகாது. புதிதாக ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கும் நிலமையை உருவாக்காது, அல்லது அதற்கான வேலைகளில் ஈடுபடாது இருக்கின்ற அமைப்பை அது எப்படிப்பட்ட மோசமான அமைப்பாயினும் உடைப்பது முற்போக்கானதாக இராது. இவர்கள் இதைத் தெளிவாக முன்வைப்பதன் மூலம் பரிபூரணமாக தம்மை அராஜகவாதிகள் என்று நிருபித்துள்ளார்கள். இம்மாதிரி நடவடிக்கைகளை லெனின் நிராகரிக்கையில் வெறும் கொள்ளைக் கோஷ்டிகளையும், உதிரியான நபர்களையும் கருத்தில் வைத்துக் கொண்டு நிராகரிக்கவில்லை. அவர் 'லற்வியன்' சமூக ஜனநாயக இயக்கத்தை மனதில் வைத்துக்கொண்டும் சொன்னார். எனவே லெனின் சொன்னது இவர்களுக்குப் பொருத்தமற்றது என இவர்கள் விவாதிப்பது எந்தவிதத்திலும் உண்மையானதல்ல.

வெறும் செயல் நோக்கங்களை மட்டும் கருதி செயற்படுகின்ற அராஜக நடவடிக்கைகள், தனியார் செய்தாலென்ன, ஓர் இயக்கம் செய்தால் என்ன அது தவறானதே. இதன் காரணமாக, இவர்கள் விளக்கமில்லாது சொல்லுகிற மக்கள் அமைப்பை கட்டுவது கூட இன்று மிகவும் பிரச்சனைக் குரியதாகியுள்ளது. மக்களை இந்த நடவடிக்கைகள் தட்டுப்பாடற்றவர்களாக சீர்குலைக்கத் தொடங்கியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது இத்தகைய நடவடிக்கைகள் உண்மையில் மக்கள் ' அமைப்பாக்கப்படுதலை வளர்ப்பதற்குப்பதில் குழப்பியே வந்துள்ளன. அண்மைக்காலங்களில் வடபகுதியில் கொள்ளைகளும் களவுகளும் அதிகரித்துள்ளன. இருக்கிற அமைப்பை சீர்குலைத்ததானது, சமூக விரோதிகள் அச்சமின்றி உலாவ வழி திறந்து விட்டிருக்கிறது. தனிப்பட்ட கொள்ளையர்களையும் கயவர்களையும் வளர்த்து விட்டுள்ளது. அத்துடன் உண்மையான அரசியல் இயக்கங்களுக்கு மாசு கற்பித்துள்ளது. கொள்ளையர் யார்?, விடுதலை இயக்கம் எது? என்ற வேற்றுமையை விளங்கிக்கொள்ள முடியாத நிலையை உருவாக்கிவிட்டுள்ளது. மொத்தத்தில் வடபகுதியில் அராஜக தன்மையை வளர்ந்துள்ளது. மக்கள் அமைப்பாக்கப்பட்டு தற்காப்பு நிலை எய்தாததுவரை, சரியான அரசியல்நெறியின் விழிப்பூட்டலுக்கு அவர்களை தயாரிக்கும் வேலைகளில் ஈடுபடாத வரை செய்யப்படும் இந்த தாக்குதல்கள் தவறான நடவடிக்கைகளாகவே இருக்கும். இது மக்கள் புரட்சிக்கான தயாரிப்பையே அதிகமாக சீர்குலைக்கிறது. எதிரியை விடவும் அவனது படையை விடவும் இதனால் அதிகம் பாதிப்படைவர்கள் புரட்சியாளர்களும் மக்களுமே. இதை லெனின் தெளிவாகக் குறிப்பிடுகிறார். "போராட்டத்தின் முழு ஏற்பாட்டுடன் நெருக்கமாக பிணைந்த வகையில் களம்புகுந்து போர் புரியும் படையின் ஒரு நடவடிக்கையாக இவர்கள் இப்போது பயங்கரவாதத்தை கருதாமல் எந்த படையுடனும் தொடர்பற்ற விதத்தில் தனித்து நிற்கும் தாக்குதல் செயலாகவே அதனைக் கருதிப் பேசுகிறார்கள். மைய அமைப்பு இல்லாத நிலையில் வட்டார புரட்சி அமைப்புகள் பலவீனமாக இருக்கும் நிலையில், பயங்கரவாதம் இந்த வகையில்தான் உருவாகும். எனவேதான் இத்தகைய போராட்ட முறை காலத்திற்கு ஒவ்வாததாயும், பொருத்த மற்றதாயும் உள்ளதென்று நாம் உறுதியாக சாதிக்கின்றோம். மேலும் இப் போராட்ட முறை தீவிரமாக போராடும் வீரர்களின் கவனத்தை முழு இயக்கத்தின் நலன்களை கருதும் போது மிகமிக முக்கியம் வாய்ந்த உண்மைக் கடமையில் இருந்து அப்பால் திருப்புகிறது என்றும், அது அரசாங்க சக்திகளை அல்ல புரட்சி சக்திகளையே சீர்குலைக்கிறது என்றும் நாம் உறுதியாக பிரகடனம் செய்து வருகின்றோம்'' (லெனின் நூ. திரட்டு, பாகம் 1. பக் 63, 64 மாஸ்கோ 1977)

லெனின் அராஜகக் குழுக்களை நோக்கி கொண்டே விமர்சனம் செய்ததாக ஒப்புக்கொள்ளும் இவர்கள், தாங்கள் அராஜகத் தன்மை கொண்டவர்கள் என்று தெரிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த தன்னெழுச்சி கட்டுப்பாடற்று நடந்த போதும், மக்கள் அமைப்புக்களின் சரியான ஒரு போராட்டமே வெற்றியை பெற்றுத்தர முடியும். கொரில்லா நடை.முறை மக்கள் யுத்தமாக பரிணமம் அடைவதில்லை. ஆனுல் மக்கள் யுத்தம் கொரில்லா போராட்டத்தை தனது நடைமுறைத் தந்திரமாக கொண்டிருக் கிறது. இது இரண்டும் அடிப்படையில் வேருனவை.

இவர்கள் இன்னும் சொல்கிருர்கள் புரட்சி அரசியலுக்கு புறம்பாக இருந்து கொண்டு தமது சொந்த வயிறுகளை கழுவும் நோக்கில் மக்களை சுரண்டி வாழ்ந்த சமூக விரோதிகளையும், தனிநபர் பயங்கரவாதக் கும்பல்களையும் நாம் தண்டித்தும் இருக் கின்ருேம், தண்டித்து வருகின்ருேம். இந்த சமூக விரோதகாடையர்களிடம் இருந்து எமது மக்களைக் காப்பதும், எமது புரட்சிப் பணிகளில் ஒன்ருகவே கொள்கின்ருேம். இந்த இலட்சிய தூய்மையும் தியாக உணர்வும் காரணமாகவே மக்கள் சக்தி எமக்குப் பக்கபலமாக அணி திரண்டு வருகிறது. எமது இந்த சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை; இனத்துரோக ஒழிப்பு நடவடிக்கைகளை ஒரு சில அரசியல் குழுக்கள் தனிநபர் பயங்கரவாதம் என விசமப் பிரசாரம் செய்து வருகின்றன. (பக் 19)

அதாவது இவர்கள் தமது நடவடிக்கைகள் நியாயமானவையே என்று சொல்லி வருகிருர் கள். இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு மக்களிடம் இருப்பதாகவும் சொல்கிருர்கள். இருக்கலாம்; ஆனுல் தனிநபர் பயங்கரவாதம்'' என்பது வெறும் செயல் பற்றிய சொற்ருெடர் அல்ல அது ஒரு கோட்பாடு பற்றியது. அதாவது தனிநபர்களை அழிப்பதன் மூலம் இந்த பிரச்சனைகளையே ஒழித்து விடலாம் என்ற கோட்பாட்டை பற்றியது இது முழுக்க முழுக்க மார்க்சிய விரோதக் கருத்தாகும். தனிநபர்கள் முக்கியமல்ல. அவர்கள் பின்னுலுள்ள போக்கே ஆபத்தானது. இந்த தனிநபர்களை அழிப்பதால், அந்தப்பிழையான போக்கையே ஒழித்து விடலாம் என்பது தவருன அணுகுமுறை. இந்த தனிநபர்களின் போக்குக்கான காரணங்களை ஒரு துலக்கமான பரீசீலனைக்கு உட்படுத்தாமல், தனிநபர்கள் மீது தாக்குதல் நடாத்துவது, போராட்டத்தை திசை திருப்புவதாகும். தனிநபர்களை அழிக்கும் போது அந்த குறிப்பிட்ட போக்கு மாறுவ் தில்லை, மாருக அந்த தனிநபரே மாறுகின்ருர் ஊழலை ஒழிப்பதற்கு ஊழல் செய்பவர்களை தண் டிப்பது தீர்வாகாது. ஊழலுக்கான சரியான வரலாற்றுக் காரணிகளை ஒழிப்பதே சரியான தீர்வாகும். அதுவே புரட்சிக்காரனின் வேலை. அது புரட்சி மூலமே சாத்தியமாகும் எனவே புரட்சிக்காக தயார் செய்வதே அதை ஒழிப்பதற்கான செயலாகும். மாருகத் தனிப் பட்ட ஓர் நபரை ஒழிப்பது என்பது அடிப் படையில் ஆத்திரக்காரர்கள் செயலே இதன் மூலம் அந்த இடத்தில் இன்னெரு தனிநபர் உருவாக்கப்பட நாம் அனுமதிக்கின்ருேம் ஆனுல் முன்னையவனை விட பின்னையவன் நுணுக்கமாகவும் வெளிக்காட்டிக் கொள்ளாத வேறு முறைகளிலும் அதையே தொடருவான். இப்படியே இது நீளும் இப்படி ஒவ்வொரு வராக அழிப்பது சாத்தியமே ஒழிய இந்த முறையால் இதை இல்லாமல் செய்து விட முடியாது.

இத்தகைய வேலைகளை மார்க்சிய லெனி னிசம் ஆதரிக்கவில்லை. அது ஒரு போதுமே இப்படியான நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்ததில்லை. தனிநபரை அழிப்பது சாராம் சத்தில் அந்த குறிப்பிட்ட போக்கு புதிய வடிவங்களில் தன்னை வளர்த்துக் கொள்ளவே வழி செய்வதால் இது அதிக பிரயோசனம் அற்றது.

மொத்தத்தில் இவர்கள் பயங்கரவாதம் ஏதோவொரு மோசமான தாக்கு என்பதாகக் கூறிக்கொண்டு விமர்சனம் செய் பவர்களை தமது எதிரிகளாகக் காட்டி தம்மை உயர்த்திக்கொள்ளவே இப்புத்தகத்தின் மூலம் முயன்றிருக்கின்ருர்கள். இன்னும் சரியாகச் சொன்னுல் தமது நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கவே இந்தப்பிரசுரத்தை வெளி யிட்டுள்ளார்கள். உண்மையில் இவர்கள் கூறும் அரசையும் அல்லது திரிபுவாத இடதுசாரி களையோ கருத்தில் வைத்துக் கொண்டு இவர் கள் இதை எழுதவில்லை. ஏனென்ருல் அரசினதும், திரிபுவாத இடதுசாரிகளினதும் வேசம் தமிழ்மக்கள் முன் என்ருே அம்பலமாகி விட்ட ஒன்று. செத்தபாம்பை அடிப்பது தேவையற்றது என்பதை இவர்கள் அறிந்து கொள்ளாமல் இதைச் சொல்லவில்லை மாருகத் தம்மை நியாயப்படுத்தவே இதை எழுதியிருக் கின்ருர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் இப்படிச் சொல்லும்போது சிலஉதிரி களும், ஓரிரண்டு பிற்போக்கு இயக்கங்களும் இந்தக்கருத்தை அதாவது தனி நபர் பயங்கர வாதம் என்று சொல்லுகின்ற கருத்தை அவர் கள் தமது வசதிகளுக்காகவும், நல்லபிள்ளைத் தனத்திற்காகவும் சொல்லுகின்றார்கள் என் பதை மறுப்பதாக யாரும் கருதி விடக்கூடாது. போராட்டத்தை திசை மழுங்கச் செய்வதற் கும் ஆட்சியாளர் கும்பலுக்கு ஒத்தூதுவதற் கும் தயாராக இருக்கும் கூட்டம் இப்படி விமர்சிப்பதெல்லாம், ஒன்றும் சரியான, நேர்மையான விடுதலை பற்றிய ஆர்வம் காரணமான கண்ணோட்டத்தில் அல்ல, தமது ஸ்தானத்தை நியாயப்படுத்தவே என்பதை நாம் அறிவோம். ஆனால் யார் கூறினாலும் உண்மை அதிலே இருக்குமாயின் அதைத் தெரிந்து கொள்வதும் தவறைத் திருத்திக் கொள்வதும் விடுதலைப் போராட்டத்தை சரி வர நடாத்திச் செல்ல மிகவும் அவசியமான தாகும்.

ஒரு இயக்கத்தையோ அதன் நடைமுறை யையோ விமர்சனம் செய்வதென்பது அவர் களின் நோக்கத்தையும் தியாகத்தையும் இழிவு படுத்தி அவர்கள் பங்கை மறுதலிக்கும் நோக் கில் அல்ல. அவர்களது நோக்கம் எவ்வளவு புனிதமானதாக இருப்பினும் அவர்கள் வரித் துக் கொண்டுள்ள பாதை தவறாய் இருக்கும் போது அவர்கள் திசை மாறிப் போகவும் இதனால் விடுதலைப் போராட்டம் வழி தவறிப் போகவும் வாய்ப்புண்டாகி விடும் என்பதனா லேயே விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

எனவே விமர்சனத்தை ஒரு போதும் சவா லாக எடுத்துக் கொள்ளாது அதைத்திருத்திக் கொள்ள முயல்வதே விடுதலையை வெற்றி கரமாக வென்றெடுக்க விரும்பும் ஒவ்வொரு போராளியினதும் கடமையாகும், தனக்கென சரியான கொள்கையை வகுத்துக்கொள்ளத் தவறுகின்ற எந்த அமைப்பும் சரியான சமூக சூழ்நிலைகளை விரிவான பரிசீலனைக்கு உட்படுத் தாது செயல்படும் போது இத்தகைய திசை விலகல்கள் ஏற்படத்தான் செய்யும். எனவே இந்தத் தவறான கருத்துகளை தமிழ்மக்கள் சரியாக இனம் கண்டு ஒரு சரியான கொள்கைத்திட்டத்தின் கீழ் அணிதிரள வேண்டியது உடனடி அவசியமாகும். இறுதி யாக ஒன்றுகூறி நாம் முடிக்கலாம். எமது முன் உள்ள பிரதான பணி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்எடுப்பதும், ஒரு தமிழீழ மக்கள் ஜனநாயக அரசை உருவாக்குதலும் ஆகும். இதற்கு பரந்துபட்ட மக்களை ஓரணியில் திரட்டுவதும், ஒருசரியான கொள்கைத் திட்டத்தின் வழிகாட்டலில் அவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்துவதும் அவசிய மாகும். இதற்கு எல்லாவிதமான தத்துவப் புரட்டல்களையும், திசை விலகல்களையும் விமர்சன ஒளியில் இனம்கண்டு கொள்வது முக்கியமானதாகும். இதன் மூலமே எமது போராட்டத்தை இறுதிவரை வெற்றிக்குக் கொண்டு செல்வதற்கு உத்தரவாதம் அளிக்க முடியும்.

●

---

மார்க்சிஸம், அராஜகவாதம் ஆகிய இவ்விரண்டும் சோஷலிஸத்தை அமைப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட போதிலும் அவை இரண்டும் முற்றிலும் மாறுபட்ட கொள்கையின் அடிப்படையில் எழுந்தவை. அராஜகவாதம் தனி மனிதனை மையமாகக் கொண்டது. தனி மனிதனின் விடுதலை பொது மக்களின் விடுதலைக்கு முதற்படி ஆகும், தனி மனிதன் விடுதலை பெறும் வரை பொது மக்களின் விடுதலை சாத்தியமில்லை. எனவே "ஒவ்வொன்றும் தனி நபருக்காக" என்பது அராஜக வாதிகளின் கொள்கை. மார்க்ஸியம் பொது மக்களை மையமாகக் கொண்டது. தனி மனிதனின் விடுதலைக்கு முதற்படி, பொது மக்களின் விடுதலையே ஆகும். அதாவது பொது மக்கள் விடுதலை பெறும் வரை தனி மனிதனின் விடுதலை சாத்தியம் இல்லை, எனவே "ஒவ்வொன்றும் மக்களுக்காக" என்பது மார்க்ஸியக் கோட்பாடு. எனவே அராஜகவாதமும் மார்க்ஸியமும் போராட்டத் தந்திரத்தில் மாறு பட்டவை என்பது மட்டுமல்ல அவை ஒன்றையொன்று மறுக்கின்ற இருவேறு கோட்பாடுகளே.

மார்க்ஸியம், அராஜகவாதம் ஆகிய இவ்விரு நேர்மாறான கொள்கைகளையும் எடை போட்டுப் பார்த்து அதனதன் குற்றம் குறைகளை வெளிப்படுத்துவது தான் நமது கட்டுரை களின் நோக்கம்.

—ஸ்டாலின்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஸ்ஸாமில் நடப்பது என்ன?

அஸ்ஸாம் போராட்டம் பற்றி எழுதாத பத்திரிகைகளேயில்லை எனினும், அம்மக்களின் போராட்டத்திற்கான அரசியல், சமூக, பொருளாதார பின்னணிகளை சரியான முறையில் முன்வைக்கவில்லை. எனவே இவற்றை புரிந்து கொள்ளல் மூலமே போராட்டத்திற்கான நியாயமான தன்மைகளை அறிந்து கொள்ள முடியும். அதனை செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மற்றைய வடகிழக்கு மாநிலத்தவர்களை விட அஸ்ஸாமியர்கள் சில வேறுபாடுடையவர்கள். அஸ்ஸாமில் இந்துக்களும், இந்துக்களல்லாத ஆதிவாசிகளும், முஸ்லிம்களும் உள்ளனர். அசாம் வீரமரபுள்ள தேசமாக விளங்கியதுடன், நீண்ட காலமாக (AHOM) அஹோம் வம்ச ஆட்சியின் கீழேயே இருந்தது. அசாமைக்கைப்பற்றிய இந்துமன்னர்கள்இந்து மதத்தைப் பரப்பினர் அசாமியர் நீண்ட காலமாக மொகாலயரை எதிர்த்து வீரத்தோடு போராடியவர்கள். மிகக் கடும் எதிர்ப்பை எதிர் கொண்ட பின்பே பிரிட்டிசார் இப்பகுதியை 1826ல் கைப்பற்ற முடிந்தது. அசாம் செல்வம் மிக்க பூமி. வன வளமும், கனிவளமும் அபரிதமாக உள்ளது. பயிரிட மிக ஏற்ற வளமான மண்ணுடையது. இவ் மூலவளங்களைச் சுரண்டவும் இப்பகுதியின் நிர்வாக கடமைகளை ஏற்கவும் பிரிட்டிஸ் ஆட்சியாளர் அண்டைப் பகுதிகளில் இருந்து பெருமளவு உழைப்பாளி மக்களையும் பல நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகளையும் இங்கே கொண்டுவந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் வங்காளிகள்.

வங்காளிகளில் பெரும்பான்மையோர் நிர்வாகிகளாயும் சிறு முதலாளிகளாயும் இருந்தனர். மார்வாடிகள், குஜராத்திகள் வட்டிக்கு பணம் கொடுப்பவராயும் முதலாளிகளாயும் உள்ளனர்: மற்றும் தொழிலாளிகளாக பீகாரிகள், நேபாளிகளும் இருக்கின்றனர். 1837 யிலேயே அசாம் பள்ளிகளிலும் நீதிமன்றங்களிலும் வங்காள மொழி புகுத்தப்பட்டது. அதன் பின் நான்கு பத்தாண்டுகளின் அசாம் மக்களின் கடும் போராட்டத்திற்குப் பின்பே 1837 இல் அசாம் பள்ளிகளில், அசாம் மொழியும் அறிமுகப்படுத்தப் பட்டது. அத்துடன் எழுத்து வளர்ச்சியடையாத அசாம் மொழிக்கு வங்காள எழுத்துக்கள் புகுத்தப்பட்டன. இவற்றிலிருந்து பிரிட்டிஸ் ஆட்சியின் போது அசாம் எவ்வளவு இழிவுபடுத்தப்பட்டது என்பதை நாம் வெகு எளிதாக புரிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஸ் ஆட்சியின் போது மிக மிக பிற்பட்டவராய் தேங்கியிருந்த அசாமியர் சுதந்திர இந்தியாவில் நிறைய வளர்ச்சியையும், நல்ல வாழ்வையும் எதிர்பார்த்தது மிக இயல்பானது தான். ஆனால் 1947 இற்குப் பின்னும் அசாமில் வளர்ச்சி ஏற்படவேயில்லை, அசாமிலிருந்தே. இந்தியத் தேயிலை உற்பத்தியில் 50%மும், கச்சா எண்ணெயில் 50%ற்கும் கூடுதலாகவும் கிடைக்கின்றது. எனினும் ஒரு நவீன தொழிற்சாலை கூட அசாமில் கிடையாது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கூட பீகாரிலேயே உள்ளது. இதற்கு 800 மைல் நீளமான குழாயில் எண்ணெய் செல்கின்றது. பிரிட்டிசார் காலத்திற்குப் பின் இரும்புப் பாதைகளில் கூட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் இல்லை. பெட்ரோலியம், தேயிலை, மரத்தொழிற்சாலைகள் பிரிட்டிஸ் காலத்திலேயே தொடங்கப்பட்டவை. அவை மேற்கொண்டு வளரவில்லை. மேலும் இருக்கின்ற தொழிற்சாலைகளினதும், பண-பொருளாதார நடவடிக்கைகள், வங்கி, சந்தை, கிடங்கு என்பவை எல்லாம் கல்கத்தாவில் குவிக்கப் பட்டன. இதனால் அசாமில் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியது.

இந்தியா முழுவதற்குமான பிளைவூட் அனைத்தையும் அசாம்தான் அளிக்கின்றது. இதைத் தவிர சணல், நிலக்கரி, மரம் போன்றவைகளை அசாம் கணிசமானளவு உற்பத்தி செய்கின்றது. ஒவ்வொரு வருடமும் அசாமிலிருந்து ரூபா 3000 கோடிக்கு மேலான உற்பத்திப் பொருட்கள் இந்தியா பூராவிற்கும் விரைகிறது. ஆனாலும் அசாமில் பொருளாதார வளர்ச்சியின்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவுகின்றது. படித்த அசாம் இளைஞர்கள் வேலையற்ற நிலையிலும், பெரும்பான்மையான உத்தியோகங்களையும் வங்காளிகளே அபகரித்துக் கொண்டனர். இந்நிலை, படித்த இளைஞர்கள் வங்காளிகள் மீது வெறுப்புக் கொள்ள ஏதுவாயிற்று.

இதைவிட அசாம் மக்கள், இன்று ஏராளமான அன்னியர்கள் தங்கள் நாட்டில் புகுந்துவிட்டதன் காரணமாக தங்கள் இனத்தின் புனிதத்தன்மை அடையாளம் தெரியாமல் அழிந்துவிடுமோ என்ற அச்சத்தால் தங்கள் இனத்தின் தனித்தன்மையைப் பாதுகாக்கப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 1947 ல் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் அசாமில் புகுந்துள்ளனர். 1971 இல் இந்தியா வங்காள தேசதின் மீது படையெடுத்த போது இன்னமும் பல லட்சம் பேர் கிழக்கு பாகிஸ்தானில் இருந்து அசாமிற்கு வந்தனர். 1974 இல் இந்திராவிற்கும் முஜீபுருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி 1971 ம் ஆண்டு மார்ச்சு 21 ம் தேதிக்கு முன் வங்களா தேசத்திலிருந்து அசாமிற்கு வந்த அனைவரும் அங்கேயே தங்கியிருக்க வழி செய்யப்பட்டது. இதன் மூலம் அசாமில் உள்ள மக்கள் தொகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

183 இலட்சம் மக்களில் 50 இலட்சத்திற்கும் அதிகமானோர் வங்களா தேசத்திலிருந்தும், நேபாளத்திலிருந்தும் வந்தவர்களென்று கணக்கிடப்பட்டுள்ளது. 1971— 1980 காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகை 18% உயர்கையில், அசாமில் 31. 5 % உயர்ந்திருக்கிறது.

இன்று அசாம் மக்களின் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடும் இரு இயக்கங்கள் உள்ளன.

1. அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கம் [A. A. S. u.]
2. அஸ்ஸாம் ஹனசங்கார பரிஷத் [A. A. G. S. P]

இவர்கள் கடந்த மூன்றுண்டுகட்கு மேலாக வெகுஜன கிளர்ச்சிகள் என்ற வடிவத்தில் போராடி வருகிறுர்கள். தெருக்களைத் தடைசெய்தல், எண்ணெய்க் குழாய்களில் எண்ணெய் செல்லாமல் தடை செய்தல், தங்கள் பிரதேசம் முழுவதும் மின்விளக்குகளை அணைத்து இருள்மயமாக்குதல் மூலம், இந்தியப் படைகளின் தாக்குதலை முறியடித்து தாம் மறைந்திருந்து தாக்குதல், போன்ற வடிவங்களில் பல இலட்சம் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அசாம் மக்களது போராட்டங்களை அடக்க, இந்திய ராணுவம், எல்லைக் காவல் படை (B. S. F) போன்றவை அனுப்பப்பட்டாலும் அதனை முறியடிக்க முடியவில்லை. குண்டாந்தடிகள், கண்ணீர்ப்புகைகள், துப்பாக்கிக்குண்டு என்பன அசாம் மக்களது போராட்டத்திற்கு புதுமெருகூட்டினவன்றி தடுத்து நிறுத்தவில்லை. ஊரடங்குச்சட்டம் போடப்பட்டபோது 1980 ம் ஆண்டில் பல இலட்சம் மக்கள் அதனை மீறி எண்ணெய் குழாய்களைத் தடை செய்து இராணுவத்தினுல் எதுவும் செய்ய முடியாது பின்வாங்கச் செய்து அசாம் மக்கள் உலகில் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களிற்கு முன்னேடியாகத் திகழ்ந்தார்கள்.

அசாம் இயக்கங்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளாவன—

1. அந்நியர்கள் யார் என்பதை உடனடியாக தீர்மானிக்க வேண்டும்.
2. வாக்காளர் பட்டியலிலிருந்து அந்நியர்கள் பெயர் நீக்கப்படவேண்டும்.

   அப்படி நீக்கப்படும் வரையில் அசாமில் தேர்தல் நடத்தப்படக் கூடாது.
3. அசாமில் உள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் அடையாளச் சீட்டுத் தரப்பட வேண்டும்.
4. அசாமிலிருந்துஅந்நியர்கள் வெளியேற்றப் படல் வேண்டும்.
5. அசாமில்மேலும் அந்நியர்கள் நுழைவதைத் தடுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்களுக்காக போராடிய அசாம் ஸ்தாபனங்கள் இரண்டுடன் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை இந்திய அரசு நடாத்தியும் எதுவிதமான தீர்வுக்கும் வரமுடியவில்லை பேச்சுவார்த்தை நடைபெற்ற காலங்களில் பல வகையான தந்திரங்களை கைக்கொண்டு போராடும் ஸ்தாபன தலைமைகளை தமது வலைக்குள் விழுத்த இந்திய அரசு முயற்சித்தபோதும் அவர்கள் பிடியில் இருந்துவிலகி, தமது நிலையில் உறுதியாக நின்றனர். இந் நிலையில் தான் 1983 பெப்ரவரியில் ஒரு தேர்தல் இந்திய அரசினுல் திணிக்கப்பட்டது. இரத்தக் காரியின் நடுவே இத்தேர்தல் நடத்தப் பட்டது. முஸ்லிம் இந்து கலவரமாக சில இடங்களில் தூண்டப்பட்டன. அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கத்தின் உதவிதலைவராக முஸ்லிம் இருந்ததிலிருந்தே இவ் இயக்கம் இதனை தூண்டியிருக்காது என நம்பலாம் இச். சூழலைப் பாவித்து இந்தியப் பாதுகாப்பு படை நுழைந்து பலரை சுட்டுக் கொன்றது, மொத்தமாக 5000 பேர் இறந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. மக்களில் பெரும்பான்மையோர் இத்தேர்தலை பகிஸ்கரித்தனர். அத் தேர்தலில் 69. 039 வாக்காளர் உள்ள தரப்பூர் எனும் இடத்தில் 267 வாக்குகள் பெற்று ஒரு இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ தேர்ந்தெடுக்கப் பட்டார். தமாஜி எனும் இடத்தில் 30, 441 வாக்காளர் உள்ளனர். இங்கு 288 வாக்காளர் மட்டுமே வாக்களித்து ஒரு சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுத்தனர். இத்தேர்தலைக் கொண்டு சட்டமன்றம், மந்திரிசபை என்பன அமைக்கப்பட்டது, இத் தேர்தல் காலத்தில் நடந்த படுகொலையானது 1983யூலைக் கலவரத்தில் இலங்கையில் நடந்த படுகொலைகளை விட எண்ணிக்கையில் அதிகமாயிருந்தும் வெளியுலகிற்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன. இன்னும் கூட பல போராட்டங்கள் நடந்து கொண்டேயுள்ளது. அசாமில் இன்னமும் சரியான அரசியல் வழிகாட்டலுடன் கூடிய ஒரு விடுதலை இயக்கம் உருவாகாவிடினும் ஒரு வெகுஜன அமைப்பான மாணவர் அமைப்பு தலைமையேற்று உறுதியுடன் இருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது

கடந்த கால போராட்ட வடிவங்களிலிருந்து வேறுபட்ட போராட்ட வடிவங்களையும் கைக் கொள்ள வேண்டிய நிலைக்கு அசாம் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். வரலாற்றில் தன்னெழுச்சியான போராட்டங்கள் சரியான தலைமையிருப்பின் தவிர்க்க முடியாமல் அடுத்தகட்டத்துக்கு வளர்ச்சி பெறும். அம்மக்களின் உறுதியும் போராட்டத் தன்மையும் எமக்கு சிறந்த படிப்பினைகளை தரும். இன் நீதியாக போராட்டத்தை ஒவ்வொரு ஜனநாய வாதியும் மனப்பூர்வமாக ஆதரிக்காது இருக்க முடியாது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய பூமி எழுந்து வரட்டும்

எல்லா இடங்களிலும்
தங்கள் அடிமைப் பாடல்களை
-ஒப்பாரிகளை, சோக கீதங்களை
மகிழச்சிப் பாடல்களை
பாடிக் கொண்டிருக்கும்
எனது மக்களுக்காக

மகிழ்ச்சியைப் பரப்பிய படி
கண் மூடித்தனமாகத் திரிகிற,
சோம்பேறித்தனத்தினால்
நேரத்தைப் பாழடிக்கிற,
பசியெடுக்கும் போது தூங்கிவிடுகிற,
சுமை அதிகமாகும் போது கதறுகிற,
நம்பிக்கை அற்றுப் போகும் போது
குடிக்கிற
எனது மக்களுக்காக

கண்ணுக்குப் புலப்படாமல்
எல்லா இடங்களிலும்
ஏறி உட்கார்ந்துகொண்டு
சிரிக்கின்ற ஜென்மங்களினால்
தங்களுக்குத் தாங்களே கட்டப்பட்டு,
விலங்கிடப்பட்டு,
குழப்பி விடப்பட்டுள்ள
எனது மக்களுக்காக

குழப்பங்களிலிருந்தும்
இரட்டை வேடங்களிலிருந்தும்
தவறாகப் புரிந்து கொள்ளலிலிருந்தும்
நல்ல வழிகளை உருவாக்க முயன்று
நிமிர்ந்து நின்று விழிக்கும்
எனது மக்களுக்காக

எல்லா முகங்களையும், எல்லா மக்களையும்
எல்லா ஆண்களையும், பெண்களையும்
அவர்களின் கணக்கிட முடியாத
தலைமுறைகளையும்
அணைத்துக் கொள்ளும் ஓர் உலகை
படைக்க முயலும்
எனது மக்களுக்காக

ஒரு புதிய பூமி எழுந்து வரட்டும்
வேறொரு புதிய உலகம் பிறக்கட்டும்.
வானத்தில் அமைதி என்பது
அழகுறப் பொறிக்கப்படட்டும்.
அஞ்சாமை மிக்க ஓர் இரண்டாம் தலைமுறை
வெளி வரட்டும்
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்.

எதையும் குணப்படுத்தும் அழகும்,
உறுதியுடன் பற்றிக் கொள்ளும் வலிமையும்
நம் இரத்தத்திலும், உயிரிலும்
விடாமல் துடிக்கட்டும்.

மனிதன் எனும் ஓர் இனம் எழுந்து வந்து
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்

மூலம் மார்க்ரேட் வாக்கர் (அமெரிக்கா.)
தமிழில்: இந்திரன்.
நன்றி: அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்.

—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்